இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டு



தொகுதி 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு

தொகுதி - 05

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரம்
பாகம் - 04

கலாபூஷணம் புன்னியாமீன்

வெளியீடு:
வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' வெளியீட்டாளர்கள்
(தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா.
தொலைபேசி 0094-81-2493746
தொலைநகல் 0094-81-2497246

'சிந்தனை வட்டத்தின் 239 வது வெளியீடு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : பீ.எம். புன்னியாமீன்
பதிப்பு : 1ம் பதிப்பு - டிசம்பர் 2006
வெளியீடு : சிந்தனை வட்டம்.
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
கணனிப் பதிப்பு: எஸ்.எம். ரமீஸ்தீன்
ISBN : 955-8913-63-4
பக்கங்கள் : 96
விலை : 200/- £ 5.00

Illangai Eluththalarkal, Oodahaviyalalarkal, Kalainjarkal Viparaththirattu.
Vol - 05

Subject : Brief History of Eighteen Srilankan Muslim Writers, Journalists and Artists.

Author : P.M. Puniyameen.
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition December 2006
Language : Tamil
Type Setting : S.M. Rameezdeen
ISBN : 955-8913-63-4
Pages : 96
Price : 200/- £ 5.00

© P.M. Puniyameen, 2006
All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

என்னுரையும், பதிப்புரையும்....

அனைவரையும் அணைத்துச் செல்லும் ஆக்க இதழான 'நவமணி'யின் அனுசரணையுடன் ''நாளைய சந்ததியின் இன்றைய சக்தி' சிந்தனை வட்டத்தினால் ஆய்வுக்குட்படுத் தப்பட்டு வரும் ''இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டினை'' கடந்த 2003 - 07 - 27ம் திகதி முதல் 'நவமணி' வார இதழில் தொடர்கட்டுரையாக எழுதிவருவதை நீங்கள் அறிவீர்கள்.

அக்கட்டுரைத் தொடரில் இடம்பெற்ற இலக்கம் 1 முதல் 139 வரையிலான குறிப்புகள் 'இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின்' விபரத்திரட்டு முதல் நான்கு தொகுதிகளிலும் பதிவாக்கப்பட்டன. தற்போது உங்கள் கரங்களில் தவழும் தொகுதி ஐந்தில் 140 முதல் 157 வரை இலக்கமிடப்பட்ட குறிப்புகள் பதிவாக்கப் பட்டுள்ளன. அத்துடன் 157 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களை ஆவணப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ''புகழனைத்தும் படைத்தவனுக்கே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விபரத்திரட்டின் ஐந்து தொகுதிகளையும் இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம், கனடா, ஜெர்மனி, அவுஸ்திரேலியா, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலுள்ள ஆவணக் காப்பகங்களிலும், பிரதான நூலகங்களிலும் ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். எதிர்கால சந்ததியினருக்கு அவை அவசியமானவையாகும். எப்போதாவது ஒருகாலகட்டத்தில் இலங்கை எழுத்தாளர்கள், ஊடக வியலாளர்கள், கலைஞர்களின் பணிகளை ஆராய வேண்டிய அவசியப்பாடு ஏற்படுமிடத்து இன்றுள்ள நிலையில் அவற்றுக்கான சான்றுகள் இல்லாமலாகி விடும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. எனவே அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படக்கூடாது என்பதே எனது விருப்பாகும். எனவே எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியாவது இவற்றை ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டில் முதல் மூன்று தொகுதிகளிலும் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களை (மூன்று பாகங்களாக) பதிவாக்கினேன். நான்காவது தொகுதி ஈழத்து புலம்பெயர் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டாக (முதலாம் பாகம்) வெளிவந்தது. இத்தொகுதியினை இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டின் நான்காம் பாகமாக எழுதியுள்ளேன்.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் பங்களிப்பினை மதிப்பீடு செய்யவும் அவற்றை ஆவணப்படுத்தவும் பிற்காலத்தில் யாராவது முற்படுவார்களாயின் பின்வரும் தகவல்கள் அவர்களுக்கு உறுதுணையாக அமையும். என எதிர்பார்க்கின்றேன். இந்த அடிப்படையில் சிந்தனை வட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையினை மீளவும் முன்வைக்கின்றேன்.

இலங்கை முஸ்லிம்களின் எழுத்துத்துறை, ஊடகத்துறை, கலைத்துறைப் பங்களிப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் சமூக, சமய, கலாசார எழுச்சிகளின் ஆரம்பப்படிகள் காணப்பட்டதெனினும் அவை தேசிய பரிமாணம் கொண்டவையாக விளங்கவில்லை, இத்தகு எழுச்சிகள் பெரும்பாலும் கிராமிய ரீதியாக, அன்றேல் பிரதேசரீதியாக இடம்பெற்றிருக்கலாம். சமய உண்மைகள், சமயப் பெரியார்களின் சரிதைகள், சமய சார்புக் கதைகள் என்பன மரபுரீதியான 'தொடர்பினைக் கொண்டு இடம்பெற்றிருந்தன. இவைகள் சரியான முறையில் இனங்கண்டு கொள்ளப்படாததினால் தற்கால ஆய்வுகளின் அடித்தளத்திலிருந்து நழுவிவிட்டன. கஸீதாக்கள், பைத்துக்கள், முனாஜாத்துக்கள் என்ற அடிப்படையில் அரபுப்பாடல் வடிவங்களாக விளங்கி வந்த இவைகள் பற்றிய ஆய்வுகளும் அவசியப்படுகின்றன. இத்தகைய துறைகளில் ஈடுபாடு கொண்டோர் பற்றிய விபரங்கள் பிற்கால சந்ததியினருக்குக் கிடைக்காமலிருப்பது துரதிர்ஷ்டமே.

19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு.

முஸ்லிம்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தி வந்த பழைமை வாய்ந்த கல்வி, கலாசார இலக்கிய மரபுகளின் போக்குகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் படிப்படியாக மாற்றமுறத் தொடங்கின. குறிப்பாக அக்கால கட்டத்தில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளை நான்கு கட்டங்களாக வகுத்து ஆராயலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அரபுத்தமிழ் - இலக்கிய வடிவங்கள்.
2. இஸ்லாமிய தமிழ்மொழி இலக்கிய வடிவங்கள்.
3. இஸ்லாமிய சிங்கள மொழி இலக்கிய வடிவங்கள்.
4. அரபு இலக்கிய வடிவங்கள்.

அரபுத்தமிழ் இலக்கிய வடிவங்கள்

தமிழ் வார்த்தைப் பதங்களை அரபு எழுத்துகளால் எழுதிய இலக்கிய வடிவங்களை அரபுத் தமிழ் இலக்கிய வடிவங்கள் என்று அழைக்க முடியும். இலங்கை முஸ்லிம்களைப் பொருத்தமட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில், பெருவாரியாக அரபுமொழியினையே பயின்று வந்துள்ளனர். மத்ரஸாக்கள் எனும் மார்க்கக் கல்வி நிலையங்கள் மூலம் இத்தகைய கல்வி போதிக்கப்பட்டு வந்துள்ளது. எனவே தான் இக்காலகட்டங்களில் அரபுத்தமிழ் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தது. அதிகமான அரபுத் தமிழ் இலக்கியங்கள் செய்யுள் வடிவினைக் கொண்டவை. இவை 'பைத்துக்கள்' எனும் பெயரினால் முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யமடைந்தன. எமக்குக் கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் 1868ம் ஆண்டில் பேருவளையைச் சேர்ந்த செய்ஹு முஸ்தபா வலியுல்லாஹ் என்பவரினால் எழுதப்பட்ட 'மீஸான் மாலை' அரபுத் தமிழில் அச்சிடப்பட்ட முதல் நூலாக இனங்காட்டப்படக் கூடியதாக உள்ளது. அதேநேரம் இவரால் எழுதப்பட்ட ''பதஹீர்றஹ்மான் பீ தர்ஜுமாஹ் தப்ஸீறுள் குர்ஆன்' (அல் - குர்ஆன் விளக்கவுரை) மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தது.

இதே காலகட்டங்களில் கண்டி மாவட்டம் அக்குரணை - கசாவத்தையைச் சேர்ந்த செய்கு முஹம்மது லெப்பை ஆலீம் - (கசாவத்தை ஆலீம் அப்பா) அவர்களும் அரபுத் தமிழ் இலக்கியத்தில் கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளார். விசேடமாக 1878ம் ஆண்டில் இவரால் பதிப்பிக்கப்பட்ட 'தீன்மாலை' குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டியதொன்றே.

இஸ்லாமிய தமிழ்மொழி இலக்கிய வடிவங்கள்

அறிஞர் சித்திலெப்பையின் சிந்தனை எழுச்சியுடன் இஸ்லாமிய தமிழ் இலக்கிய வடிவங்கள் நூலுருப் பெறலாயின. குறிப்பாக சா. சேகுத் தம்பி என்பவரால் 1878ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'சிறா நாடக மன்ற காரண மாலை', அ.லெ. ஆமீது என்பவரால் 1883 இல் வெளியிடப்பட்ட 'இபுலீசு படைப்போர்' என்பவற்றைக் குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில் முஸ்லிம் சமூக சிந்தனையாளரும், கல்விமானும், சீர்திருத்தவாதியுமான அறிஞர் சித்திலெப்பை அதிகளவில் நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார். அத்துடன் பிற எழுத்தாளர்களின் நூல்களையும் தமது 'முஸ்லிம் நேசன்' பதிப்பகத்தில் பதிப்பித்துள்ளார். 1885 ஆம் ஆண்டில் இவரால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட 'அசன்பேயின் கதை' இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதலாவது நாவல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய சிங்களமொழி இலக்கிய வடிவங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டங்களில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் சிங்கள மொழிமூலமாகவும் நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. 1893ம் ஆண்டில் காலியைச் சேர்ந்த ஹசன் அப்துல் காதர் வாழ மஸ்தான் என்பவர் 'கருணாகுரு போர்வைக்கவி' எனும் நூலினை வெளியிட்டுள்ளார்.

அரபு இலக்கிய வடிவங்கள்

அரபுத்தமிழில் எழுதிவந்த முஸ்லிம் எழுத்தாளர்கள் ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறுகளில் அரபுமொழியிலும் நூல்களை எழுதியுள்ளமை விசேட அம்சமாக விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக 1891 ஏப்ரல் 03ம் திகதி பேருவளையைச் சேர்ந்த எம். ஹாஜியார் அவர்கள் 'பத்றியா வாஹிதியா' எனும் நூலினையும், 1893 ஆகஸ்ட் 27ம் திகதி அஹமத் பின் முஹமத் ஹசன் என்பவர் 64 பக்கங்களைக் கொண்ட 'துற்றத்துல் மபாஹிர் ஹிதாயத்துல் ஹைர்' எனும் நூலினையும், 1899 நவம்பர் 27ம் திகதி ஓ.சல்டீன் என்பவர் 56 பக்கங்களைக் கொண்ட 'ராத்திபுல் நக்ஷபந்தியா' எனும் நூலினையும் வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாறாக நோக்கும் போது

பத்தொன்பதாம் நூற்றாண்டில் முஸ்லிம் எழுத்தாளர்கள் அரபு, தமிழ்,சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நூல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

20ம் நூற்றாண்டில் முஸ்லிம் எழுத்தாளர்கள்

ஆனால் 20-ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பானது வேகமாக அதிகரித்துள்ளது. கல்வி ரீதியான நூல்கள், இஸ்லாமிய மத நூல்கள், இஸ்லாமிய ஆய்வு நூல்கள், கவிதைகள், கட்டுரைகள், தர்க்கவியல், நாவல்கள், சிறுகதைகள், உருவகக்கதைகள், புதுக்கவிதைகள், மொழிபெயர்ப்புகள், நாடகங்கள், உரைநடைகள், உரைச்சித்திரங்கள், வரலாறு, வரலாற்று ஆய்வுகள்... இவ்வாறாக வளர்ச்சியடைந்து கொண்டு சென்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட வளர்ச்சிப் போக்கானது தேசிய பரிமாணத்தை அடைந்ததுடன் பத்திரிகைகளில் மாத்திரமல்லாமல் நவீன இலக்றோனிக் மீடியாக்களிலும் இத்தகைய பங்களிப்புகள் தொடர்ந்தன. இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

19- ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இருந்து இன்றுவரை இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பினை ஆராயுமிடத்து எமது பருமட்டான ஆய்வுகளின்படி சமூக எழுச்சியை அடிப்படையாகக் கொண்டு, அன்றேல் அதையொத்த ஏனைய நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு சுமார் 2800 க்கு மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களை இலங்கை மண்ணில் இனங்காணக் கூடியதாக உள்ளது.

19- ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் முஸ்லிம் எழுத்தாளர்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு 20ம் நூற்றாண்டிலும் தொடர்கிறது. இருப்பினும் 20-ம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் அது வேகமான வளர்ச்சியினைக் காட்டவில்லை, இக்காலகட்டங்களில் செய்யுள் அமைப்பில் காணப்பட்ட இலக்கிய வடிவங்கள் உரைநடை இலக்கியங்களாகப் பரிணாமம் அடைந்ததுடன், சமய சித்தாந்தங்களினூடாக சமூக உணர்வுத்தூண்டல்கள் இடம்பெற்றன. இக்கால கட்டங்களில் மதவியல், சமூகவியல், அறிவியல், வரலாற்றியல் சார்ந்த பல நூல்களை முஸ்லிம் எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். தமிழ், அரபுத்தமிழ், அரபு, ஆங்கிலம், சிங்களம், மலாய் ஆகிய மொழிகளில் முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஊடகத்துறையில் முஸ்லிம்களின் பங்களிப்பு

ஒரு சமூகத்தின் உணர்வூட்டல்களுக்கு, அவ்உணர்வூட்டல் களினூடாக சமூகத்தின் சிந்தனைகளைத் தூண்டுவதற்கு, அச்சிந்தனைத் தூண்டல்களினூடாக சமூக எழுச்சிக்கு அத்திவாரமிடுவதற்கு சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களின் பங்களிப்பு எவ்வளவு தூரத்திற்கு முக்கியம் பெறுகின்றனவோ - அதேபோல அக்கருத்துக்கள் தேசிய பரிமாணத்தை அடையவும், மக்கள் மத்தியில் சென்றடையவும் ஊடகத் துறைகளின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊடகத்துறை' என்ற எண்ணக்கரு - நவீன காலத்தில் விசாலமான கருத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றது. ''உலகச் சிந்தனை''களை உள்ளங்கைக்குள் சுருக்கி விட்ட நவீன தொடர்பாடல் துறையின் அபிவிருத்தியானது இன்று பத்திரிகைத் துறையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு விடாமல் வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம்... என்று வியாபகமடைந்து செல்கின்றது.

இலங்கை முஸ்லிம்களின் ஊடகத்துறை வரலாற்றினை ஆராயும் போது ஏனைய நாடுகள், ஏனைய சமூகங்களைப் போலவே பத்திரிகைத்துறையின் ஆரம்பத்துடனே தோன்றுகின்றது. 1882. டிசம்பர் - 21ம் திகதி 'முஸ்லிம் நேசன்' எனும் பத்திரிகையை அறிஞர் சித்திலெப்பை வெளியிட்டார். இதுவே இலங்கை முஸ்லிம்களின் முதற்பத்திரிகையாகும். 1898 பெப்ரவரி 05ம் திகதி அறிஞர் சித்தி லெப்பே வபாத்தானதை யடுத்து அறிஞர் ஐ.எல். எம். அப்துல் அஸீஸ் 1899 இல் முஸ்லிம் நேசன் பத்திரிகையின் ஆசிரியரானார். இருப்பினும் முஸ்லிம் நேசன் புதிய நிர்வாகத்துக்கும் அஸீஸ் அவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக முஸ்லிம் நேசனில் இருந்து விலகி 1900ம் ஆண்டில் 'அஸ்ஸபாப்' எனும் அரபுத் தமிழ் பத்திரிகையை ஆரம்பித்ததுடன் 1901 ஆம் ஆண்டில் 'முஸ்லிம் பாதுகாவலன்' பத்திரிகையைத் தொடங்கினார். இப்பத்திரிகையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை அரசாங்கத்துக்கும், ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கும் தெரிந்துகொள்வதற்காக வேண்டி 'முஸ்லிம் கார்டியன்' என்ற ஆங்கிலப் பகுதியையும் முஸ்லிம் பாதுகாவலனில் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக முஸ்லிம்களின் பத்திரிகைத்துறையின் பயணம் தொடர்கின்றது. இலங்கை வானொலி ஆரம்பிக்கப்பட்ட பின்பு பல்வேறுபட்ட துறைகளிலும் முஸ்லிம்களின் பங்களிப்பு இடம்பெறலாயிற்று. அதே போல தொலைக்காட்சியையும் குறிப்பிடலாம்.

இவ்வாறாக ஊடகத்துறையில் பத்திரிகை ஆசிரியர்களாக, பத்திரிகையாளர்களாக, செய்தியாளர்களாக, அறிவிப்பாளர்களாக.... என்று முஸ்லிம்களின் பங்களிப்பினை இனங்காட்ட முடியும். எமது பருமட்டான ஆய்வுகளின் படி சுமார் 1250 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து இன்று வரை பல்வேறுபட்ட ஊடகங்களிலும் ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றியுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

கலைத்துறையில் இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு

'முத்தமிழை' இயல், இசை, நாடகம் எனத் தமிழறிஞர்கள் வரையறை செய்வர். 'இயல்' -இலக்கியத்துறை சார்ந்தது. இசை, நாடகம் கலைத்துறை சார்ந்தது. கலைத்துறையில் இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், திரைப்படம், தொலைக்காட்சி,... போன்றன அடங்கும். கலைத்துறையில் ஈடுபாடு கொண்டோரை பொதுவாகக் கலைஞர்கள் என அழைப்பர்.

இலக்கிய - எழுத்துத்துறைகளில் இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு கணிசமான அளவில் காணப்பட்ட போதிலும் கூட கலைத்துறையில் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு இஸ்லாமிய மத வரையறைகளும் ஒரு காரணமாகும்.

இருப்பினும் 19-ம் நூற்றாண்டிலிருந்தே ஆங்காங்கே முஸ்லிம் கலைஞர்களின் கலைத்துவ வெளிப்பாடுகள் காணப்பட்ட போதிலும் கூட பெருமளவில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குள்,அவை வரையறை செய்யப்பட்டிருந்தமையினால் தேசிய பரிமாணத்தை அடையவில்லை. 20-ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இந்நிலையில் படிப்படியான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பருமட்டான ஆய்வுகளின் படி இலங்கை முஸ்லிம் கலைஞர்கள் சுமார் முன்னூற்றுக்கு மேற்பட்டோரின் பங்களிப்புக்கள் தேசிய பரிமாணத்தை அடைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலத் திட்டம்

என்னால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் அடிப்படையில் 19-ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் இருந்து 21ம் நூற்றாண்டின் தற்போதைய காலப் பகுதிவரை சுமார் 2800 க்கு மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களும், 1250 க்கு மேற்பட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும், 300க்கு மேற்பட்ட முஸ்லிம் கலைஞர்களுமாக மொத்தமாக 4350க்கு மேற்பட்ட பெயர்களை இனங்காணக் கூடியதாக உள்ளன.

எனவே இத்தகைய ஆய்வினை ஓரிரு மாதங்களுக்குள் ளாகவோ, அன்றேல் ஓரிரு வருடங்களுக்குள்ளாகவோ முடித்துவிட முடியாது. நான் வாழும் வரை இத்தகைய ஆய்வினைத் தொடர வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருக்கின்ற போதிலும் கூட இம்முயற்சிக்கு சமகாலத்தைச் சேர்ந்த முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் தரும்ஆதரவும், ஊக்கமும் மிக மிகக் குறைவு. எனவே இதனை ஒரு திணிப்பான நடவடிக்கையாகவே மேற்கொள்ள வேண்டியுள்ளதினால் ஏற்படக் கூடிய மனத்தாங்கல்கள் சோர்வுகள் தவிர்க்க முடியாததாகிவிடுகின்றன.

19-ம் நூற்றாண்டின் இறுதிக்காலகட்டத்தில் இருந்து இன்றுவரை என, காலத்தினை வரையறை செய்து இப்பணியினை செவ்வனே செய்வதென்றால் 4500க்கு மேற்பட்ட எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் திரட்ட வேண்டியிருக்கும். இது தனி ஒரு மனித முயற்சியால் சாத்தியப்படக் கூடியதொன்றல்ல.

4500 பேர்களையும் திரட்ட முடியாவிட்டாலும் கூட குறைந்தபட்சம் 1000 பேர்களையாவது திரட்டிப் புத்தகமாக்கி ஆவணப் படுத்த முடியுமென்றால் அதை நான் பாக்கியமாகக் கருதுவேன்.பொருளாதார நோக்கில் பார்க்கும் போது இது

இலாபகரமான முயற்சியல்ல என்பதை நான் உணராமலில்லை. நிச்சயமாக பாரிய நஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அதைப்பற்றி நான் கவலையடையவில்லை. இதை ஒரு கடமையாக எண்ணி இப்பணியினை நான் மேற்கொண்டு வருகின்றேன். இதன் பெறுமதி சமகாலத்தில் உணரப் படாவிட்டாலும் கூட என்றோ ஒரு காலம் உணரப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டுத் தொடர் 'நவமணி'யில் வெளிவரத் தொடங்கியதையடுத்து பிறமத எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு 'முஸ்லிம்' என்று வரையறையை விதிக்காமல் இதனைப் பொதுவாக மேற்கொள்ளலாமே என்று கருத்துத் தெரிவித்தனர். முஸ்லிம் சமூகத்தினரின் வரலாறுகள் பதியப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே இவ்வாய்வினை நான் மேற்கொண்டதினால் என்னுடைய அடிப்படை நோக்கத்தை மாற்றிக்கொள்ளாது முஸ்லிம் சமூகத்தினரின் வரலாறுகளை பதியும் அதே நேரத்தில் இலங்கை புலம்பெயர் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள, கலைஞர்களின் விபரங்களைப் பதிவு செய்யும் பணியினையும் இத்திட்டத்தோடு இணைத்து நடை முறைப்படுத்தி வருகின்றேன். ஊடக அனுசரணை கிடைக் குமிடத்து எதிர்காலத்தில் தமிழ் எழுத்தாளர்கள், ஊடகவியலா ளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் திரட்டும் எண்ணமும் எனக்குண்டு.

இதை இவ்விடத்தில் ஏன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது என்றால் பிறமத எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் காட்டும் ஆர்வத்தைப் போல எமது முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் ஆர்வம் காட்ட முன்வருகின்றார்கள் இல்லை. சில எழுத்தாளர்கள் பல்வேறுபட்ட நிபந்தனைகளைக் குறிப்பிட்டு விபரங்களைத் தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அந்த விடயத்துக்கு முக்கியத் துவம் கொடுக்க வேண்டும், இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவரை விட விசாலமாக வரவேண்டும்....' என்றெல்லாம் சிறுபிள்ளைத்தனமான நிபந்தனைகளும் அதில் அடங்கும்

ஒன்றைமட்டும் நான் ஆணித்தரமாக இவ்விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நான் மேற்கொள்வது ஒரு பொதுப்பணி. இதற்கு அரசாங்க உதவிகளோ, வெளிநாட்டு உதவிகளோ, அன்றேல் இயக்கங்களின் உதவிகளோ கிடைப் பதில்லை. அதைநான் எதிர்பார்க்கவும் இல்லை. இப்பணிக்கான செலவிடப்படுவது என்னுடைய சொந்தப்பணம், எனவே எத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படும் அவசியம் எனக் கில்லை என்பதை நிபந்தனை விதித்த எழுத்தாளர்கள், உடகவியலாளர்கள், கலைஞர்கள் உணர்ந்து கொள்ளட்டும். இப்போது உங்கள் துறைகளில் நீங்கள் 'ஜம்பவான்கள்' என்ற திமிர் இருக்கலாம். ஆனால் இதுபோன்ற ஒரு வரலாற்றுப் பதிவில் இடம்பெறாதவிடத்து நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு உங்கள் நாமமே தெரியாது போய்விடும் என்பதை அடக்கத்துடன் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதே நேரம்..

இவ்விடத்தில் இன்னுமோர் விடயத்தையும் சுட்டிக் காட்டியே ஆக வேண்டும். ஏற்கனவே வெளிவந்த முதல் மூன்று பாகங்களிலும் பல முஸ்லிம் ஊடகவியலாளர்களின் விபரங்களை நான் பதிவாக்கியிருந் தேன். ஒரு முஸ்லிம் ஊடகவியலாளராவது அப்புத்தகங்களைப் பற்றிய ஒரு சிறு விமர்சனத்தையாவது, அன்றேல் ஒரு சிறு செய்தியையாவது தாம் சார்ந்த ஊடகங்களில் கூட எழுதவில்லை. ஆனால் சில தமிழ் அன்பர்கள் இந்நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கையிலும், வெளிநாடுகளிலும் விமர்சித்திருந்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவிடயமாகும்.

இலங்கையைப் பொருத்தமட்டில் முஸ்லிம்கள் பல்வேறு

பட்ட துறைகளில் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்ற போதிலும் கூட அவைகள் எவ்வித பதிவுகளுக்கும் உட்படாமலிருக் கின்றன. உண்மையிலே வேதனைக்குரிய விடயம். அதேநேரம் எமது முஸ்லிம்களின் அசிரத்தைதான் காரணம் என்பதை கடந்த ஐந்து வருட அனுபவத்தில் நான் நன்கு புரிந்து கொண்டேன்.

எத்தகைய மனக்கசப்புக்கள் வந்தபோதிலும் கூட நான் எடுத்த பணியை முன்னெடுத்துச் செல்வேன். இன்ஷாஅல்லாஹ்.

சிந்தனை வட்டத்தின் 239வது வெளியீடாக வெளிவரும் இந்நூலுக்கும் தங்களது ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை யுடன் விடைபெறுகின்றேன்.

மிக்க நன்றி

அன்புடன்
உங்கள்

~கலாபூஷணம் புன்னியாமீன்~
பணிப்பாளர்

வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
14-உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை.

2006 டிசம்பர் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் அணைத்துச் செல்லும்

ஆக்க இதழ்

நவமணி NAVAMANI
THE AWAKENING VOICE OF FREELANKA

யின் அனுசரணையுடன்

நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

சிந்தனை வட்டம்

மேற்கொண்ட ஆய்வின் விளைவே

உங்கள் கரங்களில் தவழும்

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு

ஐந்தாம் பாகம்

ஆய்வுப் படிமுறை

- எழுத்தாளர்கள், ஊகவியலாளர்கள், கலைஞர்கள் விபரத்திரட்டு
  - இலக்கியவாதிகள்
    - படைப்பிலக்கியம்
      1) சிறுகதை
      2) கவிதை
      3) நாவல்
      4) நாடகம்
      5) ஏனையவை
    - கட்டுரை
      1) அரசியல்
      2) சமூகம்
      3) உலக அரங்கு
      4) விமர்சனம்
      5) ஏனையவை
  - ஊடகவியலாளர்கள
    - செய்திப் பத்திரிகை
      1) ஆசிரியர்கள்
      2) செய்தியாளர்கள்
      3) புகைப்படம்
      4) ஏனையவை
    - சஞ்சிகை
    - இலத்திரனியல் ஊடகம்
      1) ஒலியம்
      2) நாடகம்
      3) திரைப்படம்
      4) ஏனையவை
  - கலைஞர்கள்
    1) ஆசிரியர்கள்
    2) செய்தியாளர்கள்
    3) செய்திக்கட்டுரையாளர்கள்
    4) ஏனையவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே பதிவானோர்:

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 1

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 1

பதிவு 01 ஏ.யூ.எம்.ஏ. கரீம்
பதிவு 02 எஸ்.எம்.ஏ. ஹஸன்
பதிவு 03 அன்பு முகையதீன்
பதிவு 04 ஐ.ஏ.றஸாக்
பதிவு 05 முபீதா உஸ்மான்
பதிவு 06 எச்.ஸலாஹுதீன்
பதிவு 07 எம்.எச்.எம்.அஷ்ரப்
பதிவு 08 எம்.எச்.எம்.புஹாரி
பதிவு 09 அப்துல் கஹ்ஹார்
பதிவு 10 எஸ். முத்து மீரான்
பதிவு 11 எச்.ஏ.ஸகூர்
பதிவு 12 ஏ.எஸ்.இப்றாஹீம்
பதிவு 13. எம்.ஐ.எம்.தாஹிர்
பதிவு 14 எம்.ஜே.எம்.கமால்
பதிவு 15 ஏ.எச்.எம்.யூசுப்
பதிவு 16 நூருல் அயின்
பதிவு 17 எம்.ஸீ.எம்.இக்பால்
பதிவு 18 ஆ. அலாவுதீன்
பதிவு 19 எம்.இஸட் அஹ்மத் முனவ்வர்
பதிவு 20 சித்தி ஸர்தாபி
பதிவு 21 ஏ.எம்.எம்.அலி
பதிவு 22 எம்.எச்.எம். ஹலீம்தீன்
பதிவு 23 என்.எஸ்.ஏ.கையூம்
பதிவு 24 எஸ்.எம்.ஜவுபர்
பதிவு 25 ஏ.எல்.எம். சத்தார்
பதிவு 26 ஜே.எம். ஹாபீஸ்
பதிவு 27 ஏ.எச்.எம். ஜாபிர்
பதிவு 28 ஏ.எம்.நஜிமுதீன்
பதிவு 29 எஸ்.எல்.ஏ. லத்தீப்

பதிவு 30 எஸ்.ஐ.எம்.ஏ. ஜப்பார்
பதிவு 31 மொஹம்மட் வைஸ்
பதிவு 32 எம்.எம். ஸப்வான்
பதிவு 33 ஹிதாயா ரிஸ்வி
பதிவு 34 என்.எம். அமீன்
பதிவு 35 மஸீதா புன்னியாமீன்
பதிவு 36 கே.எம்.எம்.இக்பால்

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 2

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 2

பதிவு 37 எம்.பீ.எம். அஸ்ஹர்
பதிவு 38 ஜிப்ரி யூனுஸ்
பதிவு 39 எம்.எஸ்.எம். அக்ரம்
பதிவு 40 ஏ.எச்.எம். மஜீத்
பதிவு 41 ஏ.ஏ.றஹ்மான்
பதிவு 42 எஸ். கலீல்
பதிவு 43 எம்.எம். ராஸிக்
பதிவு 44 கே. சுலைமா லெவ்வை
பதிவு 45 யூ.எல்.எம். ஹுவைலித்
பதிவு 46 ஏ.ஆர்.ஏ.பரீல்
பதிவு 47 சுலைமா சமி
பதிவு 48 ரஸீனா புஹார்
பதிவு 49 ஐ.எம். மாரூப்
பதிவு 50 ஸெய்யித் முஹம்மத்
பதிவு 51 ஏ.எஸ்.எம்.ரம்ஜான்
பதிவு 52 அப்துல் லத்தீப்
பதிவு 53 எம்.எம்.ஜமால்தீன்
பதிவு 54 ஏ. ஜபார்
பதிவு 55 முஹம்மது பௌஸ்
பதிவு 56 சிபார்தீன் மரிக்கார்
பதிவு 57 மஷ்ரா சுஹ்றுத்தீன்
பதிவு 58 யூ ஸெயின்
பதிவு 59 ஏ.எல்.எம். அஸ்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 60 எம்.எம்.எஸ். முஹம்மத்
பதிவு 61 முஹம்மட் கலீல்
பதிவு 62 எஸ்.எல்.எம். அபூபக்கர்
பதிவு 63 எம்.யூ. முஹம்மத் பஷீர்
பதிவு 64 முஹம்மத் இஸ்மாஈல்
பதிவு 65 முஹம்மட் பைரூஸ்
பதிவு 66 எம்.ஐ.எம். முஸ்தபா
பதிவு 67 றபீக் பிர்தௌஸ்
பதிவு 68 புர்கான் பீ இப்திகார்
பதிவு 69 எம்.எஸ்.எஸ்.ஹமீத்
பதிவு 70 அப்துல் மலீக்
பதிவு 71 அப்துல் ஸலாம்
பதிவு 72 எம்.எச்.எம். கரீம்
பதிவு 73 எம்.எஸ்.றம்ஸீன்
பதிவு 74 அப்துல் அசன்
பதிவு 75 ஏ.எஸ்.எம். நவாஸ்
பதிவு 76 முஹம்மத் ஹஸனி
பதிவு 77 எஸ்.எஸ். பரீட்

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 3

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்
பாகம் 3

பதிவு 78 கல்முனை முபாறக்
பதிவு 79 ஏ.எம். நஸீம்டீன்
பதிவு 80 மாத்தளைக் கமால்
பதிவு 81 நூறுல் ஹக்
பதிவு 82 ஜமால்தீன்
பதிவு 83 முஹம்மட் றபீக்
பதிவு 84 முஹம்மத் சுகைப்
பதிவு 85 முஹம்மது மூஸா விஜிலி
பதிவு 86 உதுமா லெவ்வை ஆதம்பாவா
பதிவு 87 ஏ.எம்.எம். ஸியாது
பதிவு 88 எம். நவாஸ் சௌபி

பதிவு 89 முகுசீன் றயீசுத்தீன்
பதிவு 90 எம்.ஐ.எம். அன்சார்
பதிவு 91 மஸ்ஹூது லெவ்வை
பதிவு 92 எம். அனஸ்
பதிவு 93 எம்.கே.எம்.முனாஸ்
பதிவு 94 பாத்திமா பீபி
பதிவு 95 ஸர்மிளா ஸெய்யித்
பதிவு 96 பாத்திமா சுபியானி
பதிவு 97 மொஹம்மட் சியாஜ்
பதிவு 98 நிஸாரா பாரூக்
பதிவு 99 பௌசுல் றஹீம்
பதிவு 100 ஏ.எல்.எம். புஹாரி
பதிவு 101 ஏ.எப்.எம். றியாட்
பதிவு 102 யு.எல்.எம். அஸ்மின்
பதிவு 103 அப்துஸ்ஸலாம் அஸ்லம்
பதிவு 104 எம்.ஏ. அமீனுல்லா
பதிவு 105 நயிமுத்தீன்
பதிவு 106 எச்.எல். முஹம்மத்
பதிவு 107 ஹுஸைன்
பதிவு 108 ஹய்ருன்னிஸா புஹாரி
பதிவு 109 எஸ்.எல். லரீப்
பதிவு 110 மர்ஹூம் அலி உதுமாலெவ்வை
பதிவு 111 மர்ஹூம் எம்.ஐ.எம். மஷ்ஹூர்
பதிவு 112 கிண்ணியா நஸ்புல்லாஹ்
பதிவு 113 திருமதி பரீதா சாகுல் ஹமீட்
பதிவு 114 அரபா உம்மா

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 4

புலம்பெயர் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம்
: பாகம் 1

பதிவு 115. என். செல்வராஜா (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 116. நவஜோதி ஜோகரட்னம் (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 117. த. ஜெயபாலன் (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 118. பத்மாஷணி மாணிக்கரட்னம் (ஜெர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 119.வேதா. இலங்காதிலகம் (டென்மார்க்)
பதிவு 120. நகுலா சிவநாதன் (ஜெர்மனி)
பதிவு 121. நா.தெய்வேந்திரம் (வண்ணை தெய்வம்) (பிரான்ஸ்)
பதிவு 122. வை. சிவராஜா (ஜெர்மனி)
பதிவு 123. சுந்தரம்பாள் பாலச்சந்திரன் (ஜெர்மனி)
பதிவு 124. சு. சண்முகம் (சண்) (டென்மார்க்)
பதிவு 125. கீத்தா பரமானந்தன் (ஜெர்மனி)
பதிவு 126. அடைக்கலமுத்து அமுதசாகரன் (இளவாலை அமுது) (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 127. இராசகருணா (ஈழமுருகதாசன்) (ஜெர்மனி)
பதிவு 128. கே.கே. அருந்தவராஜா (ஜெர்மனி)
பதிவு 129. கொண்ஸ்டன்ரைன் (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 130. அம்பலவன் புவனேந்திரன் (ஜெர்மனி)
பதிவு 131. பொ. சிறிஜீவகன் (ஜெர்மனி)
பதிவு 132. கலைவாணி ஏகானந்தராஜா (ஜெர்மனி)
பதிவு 133. வை. யோகேஸ்வரன் (ஜெர்மனி)
பதிவு 134. அன்ரனி வரதராசன் (ஜெர்மனி)
பதிவு 135. பொ. தியாகராசா (வேலணையூர் பொன்னண்ணா) (டென்மார்க்)
பதிவு 136. பொ. கருணாகரமூர்த்தி (ஜெர்மனி)
பதிவு 137. ஜெயாநடேசன் (ஜெர்மனி)
பதிவு 138. இ.மகேந்திரன் (முல்லைஅமுதன்) (ஐக்கிய இராச்சியம்)
பதிவு 139. றமேஷ் வேதநாயகம் (ஐக்கிய இராச்சியம்)

இத்தொகுதியில் பதிவாவோர்:

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 5

முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரம் : பாகம் 4

பதிவு 140. அஷ்ரப் - ஏ - ஸமத்
பதிவு 141. எம்.எம்.எம். மஹ்றூப் கரீம்
பதிவு 142. அன்பு ஜவஹர்ஷா
பதிவு 143. ஏ.எம். இஸ்ஸடீன்
பதிவு 144. எஸ்.எம். அறூஸ்

பதிவு 145. எம்.ஆர்.கே. மவ்பியா
பதிவு 146. எம்.யூ.எம். ஜிப்ரி (போர்வை பாயிஸ்)
பதிவு 147. ஏ.எல்.எம். ஸூம்ரி (திக்குவல்லை ஸூம்ரி)
பதிவு 148. எம்.எச்.எம். ஹாரித்
பதிவு 149. அபூதாலிப்
பதிவு 150. த. மீராலெவ்வை (அனலக்தர்)
பதிவு 151. எம்.எம்.எம். கலீல் (கலைவாதிக் கலீல்)
பதிவு 152. முஹம்மது பாறூக்
பதிவு 153. யூ.எல். முஸம்மில்
பதிவு 154. பாயிஸா கைஸ்
பதிவு 155. எஸ். மொஹிதீன் அடுமை. (தலவின்னை பூதொர)
பதிவு 156. எம்.பீ. ஹுசைன் பாருக்
பதிவு 157. ஏ.எம்.எம். அத்தாஸ்



சிந்தனை வட்டம்

நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிந்தனை வட்டம்

நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு- தொகுதி 5

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியாலாளர்கள், கலைஞர்கள் விபரம்

பாகம் 04

கலாபூஷணம் புன்னியாமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 140

அஷ்ரப் – ஏ –ஸமத்

ஊடகத்துறை

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு, தற்போது மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் தெஹிவளை தேர்தல் தொகுதியில் கல்கிஸ்ஸை கிராமசேவகர் பிரிவில் வசித்து வரும் அஷ்ரப் - ஏ- ஸமத் அவர்கள் ஓர் ஊடகவியலாளரும், எழுத்தாளரு மாவார்.

1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எச்.எஸ். ஸமத், அவ்வா உம்மா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த அஷ்ரப் தெமட்டகொடை தமிழ் வித்தியாலயம், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, தெஹிவளை தொழிநுட்பக் கல்லூரி, கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மூலம் பத்திரிகைத்துறை டிப்ளோமா (National Dip.in. Journalism) மற்றும் செயலாளர், முகாமைத்துவ உயர் டிப்ளோமாப் பயிற்சி நெறிகளையும் கற்றுத் தேறியுள்ள இவர் கணனித்துறையிலும், ஆங்கிலத்துறையிலும் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார்.

இவர் தற்போது வீடமைப்பு அமைச்சின் ஊடக அலுவலகர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவி முகாமையாளர் (பொது சனத் தொடர்பு) போன்ற பதவிகளை வகித்து வருகின்றார்.

பாடசாலைக் காலம் தொட்டே எழுத்துத்துறையில் ஈடுபாடு மிக்கவராகக் காணப்பட்ட இவரின் கன்னிச் சிறுகதையானது ''விமானம் பறந்தது, உயிரும் பறந்தது'' எனும் தலைப்பில் 1985 ம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமானது. அன்றிலிருந்து இன்றுவரை சுமார் 15 சிறுகதைகளையும், நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, மித்திரன், சுடர்ஒளி, தினக்குரல், தினமதி, சிந்தாமணி, தினகரன் வாரமஞ்சரி, சண்டே ஒப்சேர்வர், டெய்லி நியுஸ், த ஐலண்ட் ஆகிய பத்திரிகையில் இடம்பெற்றுள்ளன.

ஓர் ஊடகவியலாளர் என்ற வகையில் லேக்ஹவுஸ் இல்லத்தின் தினகரன், டெயிலி நியுஸ் தினமின, ஒப்சேர்வர் பத்திரிகைகளில் கொழும்பு, தெஹிவளை - கல்கிஸ்ஸை விசேட நிருபராகப் பணியாற்றி வருகின்றார். அத்தோடு மாலைதீவிலிருந்து நாளாந்தம் வெளிவரும் ''வாகிறா'' பத்திரிகையின் ஆங்கிலப் பகுதியின் நிருபராகவும், சவுதி அராபியாவின் அரப் நியுஸ் பத்திரிகையின் செய்தி நிருபராகவும் கடமையாற்றி வரும் இவர் நவமணி, சுடர் ஒளி ஆகிய பத்திரிகைகளுக்கும் செய்திகளை எழுதி வருகின்றார்.

க.பொ.த (சா/த)த்தில் கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் 'கோமளம்' எனும் மாதாந்த இலக்கியச் சஞ்சிகையொன்றை சுமார் நான்கு ஆண்டுகளாக வெளியிட்டு வந்தார். அதே போல சந்தி, பூவிழி போன்ற சஞ்சிகைகளிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

கல்முனை மஹ்மூத் பாலிகா மகாவித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ள இவர் சம்மாந்துறை தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பக் கல்லூரியின் தேசிய ஆங்கிலப் பயிற்சி நெறியின் 'இங்கிலிஸ் போரம்' எனும் பத்திரிகையையும் நடத்தினார். பின்பு தெஹிவளை தொழில்நுட்பக் கல்லூரியில் 'ஆங்கில டிப்ளோமா' பயிற்சினைத் தொடர்ந்த காலத்திலும் 'இங்கிலிஸ் போரம்' பத்திரிகையைத் தொடர்ந்தும் வெளியிட்டார். தற்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மாதாந்தம் வெளியிடப்படும் 'சரண' எனும் சஞ்சிகையின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பாசிரியராகவும் பணியாற்று கின்றார்.

இவரால் எழுதப்பட்ட பல கட்டுரைகள் பிரதேச, தேசியமட்டங் களில் பல்வேறு பரிசில்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தனது எழுத்துத்துறை ஈடுபாட்டுக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் காரண கர்த்தாவாக இருந்து ஊக்கமும், ஆக்கமும் வழங்கி வரும் ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும், தற்போதைய கொழும்பு கிராண்பாஸ்ட் சர்வதேசப் பாடசாலையின் வணிகத்துறைப் போதகருமான தனது அன்புத் தந்தை எம்.எச்.ஏ. ஸமத் அவர்களை யும், தனது அன்பு மாமா டாக்டர் ஏ.எம். அபூபக்கர்அவர்களையும், தனது நெஞ்சில் நிலைத்திருக்கும் ஆசான் அவர்களையும் அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவர் நாடகம், அறிவிப்பாளர் போன்ற துறைகளிலும் ஓரளவு ஈடுபாடு கொண்டுள்ளார்.

பாலர் பாடசாலை ஆசிரியையான ரஹீமா அஷ்ரப்பின் அருமைக் கணவரான இவரின் முகவரி :

Ashraff A - Samad.
11/7. St. Mary's Rd.
Mount Lavania

பதிவு 141

எம்.எம்.எம். மஹ்றூப் கரீம்

எழுத்துத்துறை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மா வட்டம், மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் காத்தான்குடி 5ம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மது முஸ்தபா முஹம்மது மஹ்றூப் கரீம் அவர்கள் எம்.எம்.எம். மஹ்றூப் கரீம், 'பரீதா மணாளன்' ஆகிய பெயர்களில் எழுதி வரும் இலங்கையில் புகழ்பெற்ற எழுத் தாளரும், பன்னூலாசிரியரும், கல்விமானும், சிறந்த நிர்வாக அதிகாரியுமாவார்.

1945ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் திகதி அ. முஹம்மது முஸ்தபா, உ.முஹம்மது பாத்தும்மா தம்பதியினரின் ஒரே புதல்வராகப் பிறந்த இவர் காத்தான்குடி அல்-ஹிறா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியையும், மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றுத் தேர்ச்சி பெற்றார்.

1963.05.02 இல் ஆசிரியராக நியமனம் பெற்ற மஹ்றூப் கரீம் அவர்கள் 65 / 66 களில் யாழ் /பலாலி விஷேட பயிற்சிக் கலாசாலையில் கணித விஷேட பயிற்சிபெற்ற ஆசிரியராகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 84ல் கலைப்பட்டதாரியாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90 இல் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பட்டதாரியாகவும், 94 இல் இந்தியா (நியூடில்லி) வில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா பட்டதாரியாகவும், 99இல் எம்.ஏ. பட்டதாரியாகவும், கல்வித் துறையில் தமது தரத்தை உயர்த்திக் கொண்டார்.

காத்தான்குடியில் அல்ஹிறா வித்தியாலயம், மத்திய மகாவித்தியாலயம், மில்லத் மகளிர் வித்தியாலயம், மீரா பாலிகா வித்தியாலயத்திலும், கல்முனையில் பாத்திமா கல்லூரி, மஹ்மூத் பாலிகா மகாவித்தியாலயத்திலும், தோப்பூரில் முஸ்லிம் மகாவித்தி யாலயத்திலும், மூதூரில் முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும், மட்டக் களப்பு சிவானந்தா தேசிய கல்லூரியிலும் ஆசிரியராக அருஞ்சேவை யாற்றி மாணவர்களின் உயர்நிலைக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தார். முதலாம் தர அதிபரான மஹ்றூப் கரீம் அவர்கள் காத்தான்குடி மீராபாலிகா மத்திய கல்லூரியில் கடமையாற்றித் தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

உண்மை + நேர்மை = பயமின்மை என்ற தாரகவழியைத் தன்வழியாகக் கொண்டு எவருக்கும் அஞ்சாது, எவரையும் அலட்சியப் படுத்தாது எடுத்த பணியை முடித்திடும் திறமை கொண்ட மஹ்றூப் கரீம் அவர்கள் இளமைக் காலந்தொட்டே எழுத்து, பேச்சு, கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகிய பல்வேறு இலக்கியத் துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தார். இவரது கன்னி ஆக்கம் 1960 ம் ஆண்டில் தினகரன் பத்திரிகையின் 'மாணவர் முரசு' பகுதியில் இடம்பெற்றது. முதல் ஆக்கத்தின் தலைப்பு ''கைப்பணிகள் புரியும் காத்தான்குடிப் பெண்கள்" என்பதாகும். இதே காலத்தில் காத்தான்குடி நவ இலக்கிய மன்றம் வெளியிட்ட "பொற்கிழி" எனும் கையெழுத்துப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரது இலக்கியப் படைப்புக்களும், கணித, விஞ்ஞான சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பொதுவான சமய சமூக சம்பந்தமான ஆக்கங்களும், கவிதைகளும், கட்டுரைகளும் "தினகரன்", "வீரகேசரி", "சிந்தாமணி" போன்ற தின, வார தேசிய

பத்திரிகைகளிலும் ''பொற்கிழி", "பூஞ்சோலை", "அறிவொளி", "அலை", "அறிவுப்பூங்கா", "அம்பு", "கலாவதி", "கலையொளி", "கலை அமுதம்", "கலைக்கதிர்", "மில்லத்", "பாத்திமா", ''கதிர்", "யாழ்பிறை", "அருவி", "இளம்பிறை", "பிறை", "ஒளி", "விழி" போன்ற சஞ்சிகைகளிலும், பிரதேசப் பத்திரிகைகளிலும் பயிற்சிக் கல்லூரி, பல்கலைக்கழக வெளியீடுகளிலும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. இந்த அடிப்படையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இவரின் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இவர் மொத்தமாக இருபது நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ***எண்முறை விருத்திகளும், இந்து அராபிய எண்முறையும்.***
இப்புத்தகம் 1965ல் யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் கலாசாலை வெளியீடாக வெளிவந்தது. 30 பக்கங்களைக் கொண்ட இப் புத்தகத்தின் விலை 8.00

2. ***எண்ணும் ஆதிகால மனிதனும் (1966)***
வெளியீடு: யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் கலாசாலை
பக்கங்கள் 40, விலை 8.00

3. ***கணித வரலாற்றில் அராபியர்களின் பங்கு (1967)***
வெளியீடு: யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் கலாசாலை
பக்கங்கள் 24, விலை 12.00

4. ***எண் இன்பம் (1967)***
வெளியீடு: கல்முனை பாத்திமாக் கல்லூரி
பக்கங்கள் 50, விலை 14.00

5. ***பரீட்சையில் சுலபமாக வெற்றியடைவது எப்படி? (1969)***
வெளியீடு: காத்தான்குடி நவ இலக்கிய மன்றம்
பக்கங்கள் 90, விலை 10.00

6. ***அன்புள்ள தம்பிக்கு (கவிதை) (1970)***
வெளியீடு: கல்முனை-சாய்ந்தமருது வை.எம்.எம்.ஏ. இயக்கம்
பக்கங்கள் 50, விலை 10.00

7. ***அன்புள்ள தங்கைக்கு (கவிதை) (1970)***
வெளியீடு: காத்தான்குடி மீரா பாலிகா மாணவர் மன்றம்
பக்கங்கள் 50, விலை 5.00

8. ***மூட நம்பிக்கை (நாடகம்) (1970)***
வெளியீடு: கல்முனை மஹ்மூத் மகளிர் மவி. மாணவர்மன்றம்
பக்கங்கள் 50, விலை 10.00

9. ***'எண்வரலாறு' (1971)***
வெளியீடு: அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை
பக்கங்கள் 160, விலை 15.00

10. ***கணித வரலாறு (1972)***
வெளியீடு: அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை
பக்கங்கள் 200, விலை 20.00

11. ***காதலா? கடமையா? (நாவல்) (1974)***
வெளியீடு: மூதூர் ம.வி. மாணவர்மன்றம்
பக்கங்கள் 86, விலை 10.00

12. **யார் குற்றவாளி (துப்பறியும் நாவல்) (1975)**
வெளியீடு: தோப்பூர் Y.M.M.A
பக்கங்கள் 60, விலை 15.00

13. ***சுகமாக வாழ்வது எப்படி? (1982)***
வெளியீடு: காத்தான்குடி - வரி இறுப்பனர் சங்கம்
பக்கங்கள் 40, இலவசம்

14. ***இஸ்லாமிய இன்னுரைகள் (1983)***
வெளியீடு: காத்தான்குடி - அல்மத்ரசதுஸ் ஸமதிய்யா
பக்கங்கள் 140, விலை 10.00

15. ***முன்னேற்றப்பாதையில் முஸ்லிம்களின் பங்கு (1973)***
வெளியீடு: காத்தான்குடி தினபதி வாசகர் மன்றம்
பக்கங்கள் 120, விலை 15.00

16. ***மற்றவர்களை நாம் எவ்வாறு கவரலாம்? (1968)***
வெளியீடு: இஸ்லாமிய நன்னோக்குக் கழகம்
பக்கங்கள் 40, விலை 5.00

17. ***காத்தான்குடி ம.ம.வி.நேற்று, இன்று, நாளை (1994)***
வெளியீடு: காத்தான்குடி ம.ம.வி.மாணவர்மன்றம்
பக்கங்கள் 22, இலவசம்

18. ***செயின் மௌலானா தைக்கா சிறப்பு மலர் (1979)***
வெளியீடு: ஜின்னா ஹாஜியார்
பக்கங்கள் 50, இலவசம்

19. ***கணித பாடம் கசப்பாயிருப்பதேன்? கரும்பான பாடமாக எப்படி மாற்றலாம்? (1988)***
வெளியீடு: காத்தான்குடி ம.ம.வி. மாணவர்மன்றம்
பக்கங்கள் 22, விலை 5.00

20. ***மீரா பாலிகா சிறப்புமலர் (2000)***
வெளியீடு: காத்தான்குடி மீராபாலிகா ம.ம.வி.
பக்கங்கள் 62, இலவசம்

இவ்வாறாக பன்னூல்களை எழுதியுள்ள மஹ்றூப் கரீம் அவர்கள் தமது வாழ்நாள் முடிவதற்கிடையில் தாம் பிறந்த தாயக மண்ணான காத்தான்குடியின் வரலாறு பற்றி பூரணமான ஒரு ஆய்வு நூலை வெளிக் கொணர வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எம்.எம். மஹ்றூப் கரீம் அவர்கள் பல நூல்களை வெளியிட்ட போதிலும்கூட 1970 - 72 காலப் பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பகுதி நேர கணித விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் "எண் வரலாறு" எனும் நூலை எழுதி வெளியிட்டதை தன் வாழ்வில் முக்கிய கட்டமாக கருதுகின்றார். ஏனெனில், இந்நூல் பற்றி பன்னூலாசிரியரும், அறிஞருமான டாக்டர் மு. வரதராஜன் அவர்கள் "தமிழ் கூறும் நல்லுலகில் 'மொழி வரலாறு' எனும் எனது நூலுக்கு 'எண் வரலாறு' என்றொருநூல் தமிழ் மொழியில் இல்லாதிருந்த குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது" எனப் பாராட்டிப் புகழ்ந்ததை தம் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாக இன்றும் நினைவு கூர்கிறார். இந்நூலுக்கு தேசிய நாளிதழ்களான தினபதி, தினகரன், வீரகேசரி பத்திரிகைகள் பாராட்டுச் சிறப்பு மலர்களையும் அக்காலத்தில் வெளியிட்டன. புதிய முறையில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் பிரயோசனமான இந்நூல் கல்வியமைச்சின் பாடசாலை பிரசுரசபையினால் பாடசாலை, நூல்நிலையப் புத்தகமாக அங்கீகாரம் பெற்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

22.11.71 ல் காத்தான்குடியில் காத்தான்குடி தினபதி வாசகர் மன்றம், வை.எம்.எம்.ஏ. ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய கல்விமான்களையும், கலைஞர்களையும் கௌரவிக்கும் விழாவில் இவர் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், கல்விச் சேவையாளர் என்றவகையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இதே போல பலவித மான பிரதேச அமைப்புகளினாலும், மாகாண, மாவட்ட தேசிய அமைப்புகளினாலும் இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக தேசிய மட்டத்தில் 1980ல் நடைபெற்ற ஹிஜ்ரி 1400- பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி மேதகு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களால் தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார். ஆய்வுத் துறையிலும் அதிகம் ஆர்வம் கொண்ட இவர் அனைத்துலக தமிழ், மற்றும் இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாடுகளில் பல கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். அவற்றுள் சில கட்டுரைகளின் விபரம் வருமாறு:

1. 1972ல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் **"மட்டக்களப்பு தமிழகத்தில் முஸ்லிம்கள்"** என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்துப் படித்தார். பேராசிரியர் உயர் திரு.சு.வித்தியானந்தன அவர்களின் பாராட்டைப் பெற்ற இக்கட்டுரையானது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூத்த தமிழிதழ்களில் ஒன்றான "ஈழநாடு" வார இதழில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டது.

2. 1978ம் ஆண்டில் தமிழகத்து காயல்பட்டணப்பதியில் நடைபெற்ற மூன்றாவது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு **"ஈழத்து முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள்", "அறிவியல் வளர்ச்சிக்கு அடிகோலிய முஸ்லிம்கள்"** என்ற இரு அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துப் படித்தார்.

3. 1979ல் இலங்கையில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் **"கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனிப்பெரும் தமிழ்த்தொண்டு"** என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்துப் படித்தார்.

4. 1980ல் இந்தியத்தமிழ் நாட்டில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் **"அழகு தமிழன்னைக்கு அணி செய்யும் அரபுப் பார்ஸிச் சொற்கள்"** என்ற தலைப்பிலான மொழி ஆய்வுக்கட்டுரையை தமிழ்கூறும் நல்லுலகுக்கு வழங்கினார்.

5. 1999ல் இந்தியத்தமிழகத்தின் சென்னைமாநகரில் நடந்த 6 வது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் **"காத்தான்குடிக் கவிஞர் திலகம் அப்துல் காதிர் லெப்பை அவர்களின் தனிப்பெரும் தமிழ்த் தொண்டு பற்றிய ஒரு மதிப்பீடு "** எனும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையை வாசித்தார். இக்கட்டுரை மாநாட்டு ஆராய்ச்சிக் கட்டுரைக் கோவையிலும் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், முஸ்லிம் மக்களது இணைப்புப்பாலங்களில் ஒருவராக தொழிற்பட்டு பல தமிழ் அமைப்புக்களினதும், தமிழ் பாடசாலைகளினதும் அழைப்புக்கேற்ப பல்வேறு சமய, சமூக, இலக்கிய, நினைவுதினக் கூட்டங்களிலும், விழாக்களிலும் கலந்து கொண்டு அடுக்குத் தமிழில் அழகுறச் சொற்பொழிவாற்றும் ஆற்றலுள்ள இவர், வடமொழி (சமஸ்கிருதம்)யிலும் பாண்டித்தியம் பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும்.

தன்னுடைய இலக்கியத்துறை ஈடுபாட்டுக்கும், எழுத்துத்துறை ஈடுபாட்டுக்கும் காரணகர்த்தாக்களாக அமைந்தவர்கள் என்ற வகையில் ஹாபிஸ் எம்.கே. செய்யதஹமது (முஸ்லிம் எழுத்தாளர் சங்கத் தலைவர்), அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ், கவிஞர் அப்துல் காதர் லெவ்வை, திருவாளர் எஸ்.பி. சிவநாயகம், பண்டிதர் வி.சீ. கந்தையா, ஜனாப் ஜே.எம்.எம்.அப்துல் காதர், திரு.கே.சிவகுருநாதன், ஜனாப் அளுஹர்தீன், வியாகரண சிரோன்மணி பூ தியாகராஜா ஐயர் ஆகியோரை அன்புடன் நினைவுகூர்ந்து வரும் இவர் காத்தான்குடி நவ இலக்கிய மன்றத் தலைவராகவும், மட்டக்களப்பு முத்தமிழ்மன்ற உப தலைவராகவும், வடக்கு, கிழக்கு மாகாண கலாசார சபை ஆலோசகராகவும், பணியாற்றி வருகின்றார்.

காத்தான்குடியைச் சேர்ந்த திருமதி எப்.பரீதா அவர்களின் அன்புக் கணவரான எம்.எம்.எம். மஹ்றூப் கரீம் அவர்களுக்கு மூன்று அன்புச் செல்வங்களுளர். மூத்தவர் டாக்டர் எம்.எம்.ஸீ.எம். உவைஸ், இரண்டாமவர் எம்.எம்.ஸீ.எம். முனவ்வர், மூன்றாமவர் பாத்திமா ரிஸானா.

இவரின் முகவரி :

M.M.M.Mahroof Careem
'ARULAHAM'
67/1, Adampodi Haji St.
Kattankudy - 5

பதிவு 142

அன்பு ஜவஹர்ஷா

எழுத்துத்துறை

வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், அநுராதபுரம் கிழக்கு தேர்தல் தொகுதியில், ஐயந்தி மாவத்தை கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த முஹம்மது ஹனிபா முஹமது ஜவஹர்ஷா அவர்கள் 'அன்பு ஜவஹர்ஷா', தமிழ்வேந்தன், பிர்தவ்ஸி, மாணிக்கராசன், வன்னிக்குமரன், துஷாட், திரையன்பன், ஞானா, அநுஷா போன்ற பெயர்களில் எழுதிவரும் பிர பல எழுத்தாளரும், கவிஞரும், கல்விமானு மாவார். பல புனைப்பெயர்களில் எழுதிய போதிலும் கூட 'அன்பு ஜவஹர்ஷா' எனும் பெயரே மிகவும் பிரபல்யமானது.

கொழும்பு கொம்பனித்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்துல் காதர் முஹம்மது ஹனிபா (அன்புதாசன்), அநுராதபுரம் ஒட்டுப்பள்ளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகூர்மீரா அஹமது முத்து தம்பதியர்களின் மூத்த புதல்வராக முஹமது ஜவஹர்ஷா 1950ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 திகதி அநுராதபுரத்தில் பிறந்தார். மட்டக்களப்பு புனித மாரியாள் கல்லூரியில் ஆரம்ப வகுப்பில் கற்கத்தொடங்கிய இவர், 1957ம் ஆண்டு தந்தையார் காலமான பின்னர் தாயாருடன் அநுராதபுரம் வந்து, புனித கன்னியர்மடம் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தார். இடைநிலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை புனித வளனார் கல்லூரியில் கற்று அக்கல்லூரியில் க.பொ.(சா.) தர பரீட்சைக்குத் தோற்றி விஞ்ஞான பிரிவில் சித்திய டைந்து, 10 மாத காலம் அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித் தியாயலத்தில் கலைப் பிரிவில் க.பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி கற்றார். பின்னர் க.பொ. த உயர்தர பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக வர்த்தகப் பிரிவில் தோற்றி சித்திபெற்றார்.

விவசாய விஞ்ஞான ஆசிரியர் பயிற்சியை யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் கலாசாலையில் 1973-1974ம் ஆண்டுகளில் பெற்ற இவர் வட மத்திய மாகாணத்தின் முதலாவது விவசாய, விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியராவார். மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் முதன் முதலாக ஆரம் பிக்கப்பட்ட ஒன்றரை வருட கால பாடசாலை முகாமைத்துவ டிப்ளோ மா பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து அதில் சிறப்புச் சித்தியைப் பெற்றார். 1995-1996 ஆண்டுகளில் உலக வங்கி உதவியுடன் நடாத் தப்பட்ட 1 AB பாடசாலை அதிபருக்கான பதினெட்டுமாத முகாமைத் துவப் பயிற்சியினை பூர்த்தி செய்தார். திறந்த பல்கலைக் கழகம், ஐ.டி.எம். நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றில் கணினிப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளார்.

1971-09-01ம் திகதி தராதரப்பத்திரமற்ற உதவியாசிரியராக நியமனம் பெற்றதிலிருந்து நொச்சியாகம முஸ்லிம் வித்தியாலயம், நாச்சியாதீவு முஸ்லிம் மகாவித்தியாலயம், அநுராதபுரம் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், அநுராதபுரம் ஸாஹிரா மகாவித்தியாலயம், மன்னார் தாராபுரம் அல்மினா மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றியுள்ளார். 1982ம் ஆண்டில் மன்னார் கல்வி வள நிலைய பொறுப்பு அதிகாரியாக நியமனம் பெற்று, மன்னார் வலய தொழிநுட்ப ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற இவர் 1989.06.01 ம் திகதி முதல் இரண்டாந்தர அதிபராகவும், 1991.06.01ம் திகதி முதல் முதலாம்தர அதிபராகவும் பதவி உயர்வுபெற்றார். தனது 34 வருட 2 மாத சேவையின் பின்னர்

2005.11.03 ம் திகதி ஓய்வுபெற்றார். தற்போது வடமத்திய மாகாண கல்வி ஆய்வுக்குழு உறுப்பினராகக் கடமையாற்றுகின்றார். இலக்கியத் துறையில் இவரது கன்னி ஆக்கம் 'எங்கள் தலைமை ஆசிரியர்' எனும் தலைப்பில் 1965ம் ஆண்டில் 'கதம்பம்' சஞ்சிகையில் இடம்பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை 25க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், 200க்கு மேற்பட்ட கவிதைகளையும், 500க்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

1965 ம் ஆண்டு புனித வளனார் கல்லூரியில் கற்றுக்கொண்டு இருக்கும் போது உயிரியல் ஆசிரியராக இருந்த திருவாளர் ஞானராஜா அவர்களின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட 'மாணவர் குரல்' சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவராக இவரது எழுத்துப் பணி செப்பனிடப்பட்டது. இரண்டு வருட காலம் அப்பத்திரிகையில் பல ஆக்கங்களை எழுதிய இவர், 'சுதந்திரன்' பத்திரிகையில், வளர்மதி பகுதியிலும், 'கதம்பம்' மாசிகையிலும், விஞ்ஞான விளக் கங்கள், சிறுகதைகள், தபால்தலை சேகரித்தல், முதல்நாள் உறை தொடர்பான ஆக்கங்களை எழுதி வந்துள்ளார்.

அநுராதபுரத்திலுள்ள இலக்கிய ஆர்வலர்களால் வெளியிடப் பட்ட புதுமையொளி, தமிழ்ச்சுடர், வீரத்தமிழன், பெட்டகம் ஆகிய கையெழுத்துப் பத்திரிகைகளில் சிறுகதைகள், சினிமாத் தொடர்பான கட்டுரைகளை எழுதினார். மேற்படி கையெழுத்துச் சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும் இருந்துள்ளார். 1969 ம் ஆண்டு 'தமிழ்ச்சுடர்' சஞ்சிகை அச்சுப்பிரதியானது. அவ்வாண்டில் அநுராதபுரத்திலிருந்து வெளியான 'புத்தொளி' சஞ்சிகையின் இணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

1972 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அநுராதபுரம் கலைச்சங்கத்தில் இணைச்செயலாளராக இவர் கடமையாற்றிய காலத்தில் மாதமொரு இலக்கிய நிகழ்ச்சியை நடாத்தவும், ஒரு வருட காலத்தில் நான்கு தொகுப்புக்களை வெளியிடவும் 'களம்' என்ற இருமாத சஞ்சிகையும் நடாத்தவும் முடிந்துள்ளதை இங்கு குறிப்பிட வேண்டும். இலங்கையில் கவியரங்குக் கவிதைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுக்கும் முதல் முயற்சியாக மேற்படி சங்கத்தால் புத்துலகம் படைப்போம், சிதைந்து போகும் சிறப்புக்கள் ஆகிய இரண்டு தொகுப்புக்கள் இவரால் தொகுத்து வெளியிடப்பட்டன.

1967 ம் ஆண்டு தொடக்கம் தினபதி நாளிதழின் இளைஞர் மன்றப்பகுதியில் சிறுவர் கதைகள், வரலாற்றுச் சம்பவங்கள், சிங்கள மொழிபெயர்ப்புச் சிறுவர் கதைகள் பலவற்றை எழுதியுள்ள இவரது பல மரபுக்கவிதைகள் முன்சொல்லப்பட்ட கையெழுத்து இதழ்களில் வெளியாகியுள்ளன. சில கதைகள் மித்திரன், ராதா, மலர் ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

1973 ம் ஆண்டு திக்குவல்லைக்கமாலின் நட்பினால் உண்டான வழிநடத்தலின் கீழ் புதுக்கவிதை படைக்கத்தொடங்கிய இவரது நூற்றுக்கு மேற்பட்ட புதுக்கவிதைகள் பல்வேறு சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன. 1974ம் ஆண்டு இலங்கையின் பல பாகங்களிலு முள்ள 44 புதுக்கவிதையாளர்களின் புதுக்கவிதைகளைத் தொகுத்து 'பொறிகள்' என்ற தொகுதியினை வெளியிட்டார். இது இலங்கையில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட புதுக்கவிதை முயற்சியாகும். அத்தோடு இந்தியாவில் பாண்டிச்சேரி பகுதியிலிருந்து வெளியிடப்பட்ட 'ஏன்' என்ற சஞ்சிகையின் இலங்கை மலர் தயாரிப்பும், இலங்கை புதுக்கவிதையாளர்கள் பெயர்ப்பட்டியலும் இவரினதும், பாலகிரியி னதும் கூட்டுமுயற்சியாகும்.

பல சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் வெளியான இவரது புதுக்கவிதைகள் 1975ம் ஆண்டு 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' என்ற பெயரில் தொகுதியாக வெளிவந்தது. ஆசிரியரான பின்னர் ஸாஹிரா மகா வித்தியாலயத்திலும், தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயத்திலும் இருந்து பிறையொளி (36 இதழ்கள்), மினா (12 இதழ்கள்) ஆகிய பாடசாலைச் சஞ்சிகைகள் இவரால் ஆரம்பிக்கப்பட்டு, பொறுப்பாசிரியராக இருந்து வெளியிடப்பட்டன. பலாலி ஆசிரியர் கலாசாலை சஞ்சிகை வரலாற்றில் வித்தியாச மானதாக வெளியான யாழ்பிறை (1975) சஞ்சிகையாசிரியராக திக்குவல்லைக்கமாலும், செயலாளராக இவரும் இருந்த போதே

வெளியிடப்பட்டது. 1976ம் ஆண்டு ஸாஹிராக் கலைவிழா மலர், 94ம் ஆண்டு ஸாஹிரா வெள்ளி விழா மலர், 2003ம் ஆண்டு ஸாஹிரா மகாவித்தியாலய பரிசளிப்பு விழா மலர் ஆகியவற்றின் தொகுப்பாசிரி யராகவும் இவர் இருந்துள்ளார்.

கவிதைகள், சிறுகதைகள், சிறுவர்கதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள், தொகுப்புகள் எனப் பல காத்திரமான இலக்கியப்படைப்புக்களைப் படைத்து வரும் அன்பு ஜவஹர்ஷாவின் ஆக்கங்கள் அகல், வானம்பாடி, வேள்வி, ஏன், எழுச்சி, விவேகசித்தன், சாந்தி ஆகிய தமிழகச் சஞ்சிகைகளிலும் மல்லிகை, தேசாபிமானி, சிரித்திரன், தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, சுடரொளி, சூடாமணி, தாயகம், அக்னி, அனு, தமிழமுது, பொறிகள், விடிவெள்ளி, பூரணி, கலசம், கலாவதி, யாழ்பிறை, சுவடுகள், களம், சுதந்திரன், நிலா, அபியுக்தன், இன்சான், மித்திரன், ராதா, சுந்தரி, மினா, பிறையொளி, யாழ்பிறை, ராவய, தினமின, விதுகல்பதி ஆகிய சஞ்சிகைகளிலும், மலர்களிலும் வெளியாகியுள்ளன.

மாதந்தோறும் நடந்த, நடக்கவிருந்த, இலக்கிய நிகழ்வுகளை 'இலக்கியச்சரம்' என்ற தலைப்பில் மல்லிகை இதழில் 'மாணிக்கராசன்' என்ற பெயரில் பல மாதங்கள் தொகுத்து வெளியிட டமை இலக்கிய ஆர்வலர்களால் பாராட்டப்பட்டது. தினகரன், 'இதயராகங்கள்' என்ற பகுதியில் 15 வாரங்களாக வெளியான 'நீ + நினைவுகள் = 0' என்ற தொடர்காவியமும், கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளர் சங்க மகாநாட்டில் 'கடந்த 20 வருடங்களில் ஈழத்துப் புதுக்கவிதை வளர்ச்சி' என்ற ஆய்வுக் கட்டுரையும் நூலாக வெளிவந்திருக்க வேண்டிய குறிப்பிடத்தக்க ஆக்கங்களாகும். தினகரன் 'படித்ததும் கேட்டதும்' பகுதியில் தொடர்ந்து ஒரு மாதகாலமாக 1976ம் ஆண்டுக்கு முன்னர் வெளியான புதுக்கவிதைத் தொகுப்புகள் தொடர்பான தகவல்கள் இவரினால் தொகுப்பட்டிருந்தன.

அநுராதபுரம் இளம் எழுத்தாளர் சங்கத்தின் (1968) செயலாளராகவும், தேன்துளி இலக்கிய வட்டத்தின் அமைப்பாளரா கவும் (1972), அநுராதபுரம் முஸ்லிம் எழுத்தாளர் சங்கத் தலைவராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் (1975), முற்போக்கு எழுத்தாளர் சங்க (1975) மாவட்டப் பிரதிநிதியாகவும், அகில இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சம்மேளன உப செயலாளராகவும் (1976), தற்போது அநுராதபுரத்தில் இயங்கும் இலக்கிய அமைப்புக்களின் போஷகராகவும் இவர் இயக்க ரீதியாக கடமையாற்றியுள்ளதோடு FAME என்றழைக்கப்படுகின்ற அனுராத புரம் முஸ்லிம் கல்வி அபிவிருத்தி இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினரான இவர் இவ்வமைப்பின் பொருளாளராகவும் கடமையாற்றி வருகின்றார். அநுராகம், படிகள், அல் மதீனா போன்ற பிரதேச இலக்கியச் சஞ்சிகைகள் இவர் படத்தை அட்டைகளில் பிரசுரித்துள்ள அதேநேரம் 2005 டிசம்பர் 'மல்லிகை' இதழ் இவர் புகைப்படத்தை முகப்பட்டையில் பிரசுரித்து கௌரவித்தது.

1966ம் ஆண்டு மலையகத்திலிருந்து வெளியான 'செய்தி' வார இதழின் நிருபராக இவரது ஊடகப்பணி தொடங்கியது. தினபதி, வீரகேசரி, தினகரன், சூடாமணி, நவமணி, உதய, சன், ஈழ நாடு, சுடரொளி ஆகிய நாளிதழ்களின் அநுராதபுர நிருபராக நீண்ட காலம் கடமையாற்றிய இவர் சிறிது காலம் தினபதி கொழும்பு நிருபராகவும் கடமையாற்றியுள்ளார். 'இலக்கிய மஞ்சரி' உட்பட பல வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இவரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளதோடு வானொலி கவியரங்குகள், கலந்துரை யாடல்கள் பலவற்றிலும் இவர் பங்குபற்றியுள்ளார்.

ஜான் பீவியின் அன்புக் கணவரான அன்பு ஜவஹர்ஷாவிற்கு இரண்டு அன்புச் செல்வங்கள் உளர். கல்வி, இலக்கியத் துறையில் ஈடுபாடுகாட்டி வருவதைப் போலவே இவர் தொழிற்சங்க நடவடிக் கைகளிலும் முனைப்பாக ஈடுபாடு மிக்கவராகக் காணப்பட்டார். தொழில்சார் துறை தொடர்பாக 'இலங்கை ஆசிரியர் சேவை', 'இலங்கை ஆசிரியர் சேவையும் சட்ட விதிக்கோவையும்' எனும் இரண்டு பெறுமதிமிக்க நூல்களை வெளியிட்டுள்ளார். இலங்கை அதிபர் சேவைக்கென முதல் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சங்கமான தரம் பெற்ற அதிபர் சேவைச்சங்கத்தின் ஸ்தாபக அங்கத்தவரான இவர் நீண்டகாலம் சிரேஷ்ட உபதலைவராக

கடமையாற்றி உள்ளதோடு 2004ம், 2005ம் ஆண்டுகளில் இச்சங்கத்தின் அகில இலங்கைத் தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.

அதே போல கிராமிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும், மாகாண ரீதியிலும், தேசிய ரீதியிலும் பல்வேறு சமூகசேவை அமைப்புக்களுடன் தொடர்புபட்டு பொதுச்சேவைகள் புரிந்துவரும் இவர் அரசியலில் இடதுசாரி அரசியல் ஆதரவாளராவார்.

அநுராதபுரம் புனித வளனார் கல்லூரியில் க.பொ.த.(சா/தரம்) வகுப்பு கற்றுக் கொண்டிருக்கும் போது முஸ்லிம் மாணவரான இவருக்கு மாணவர் தலைவர் வழங்கப்பட்டதை தன் வாழ்க்கையில் தனக்குக் கிடைத்த முதல் கௌரவமாக குறிப்பிடும் இவர் 1997 ம் ஆண்டு கலாசார அமைச்சினால் கலாபூஷணம் தேசிய விருதும், 2000ம் ஆண்டு உலக ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு அகில இலங்கை சமாதான நீதவான் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டதை தான் பெற்ற குறிப்பிடத்தக்க கௌரவங்களாக எண்ணுகின்றார். அதேநேரம் கல்வி அபிவிருத்தி வட்டத்தின் சார்பில் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் மூலம் 'Spring of Wisdom' என்ற பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு அதிபர் என்ற வகையில் வடமத்திய மாகாணத்தின் சிறந்த தேசிய பாடசாலை அதிபராக 2004 ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களிடமிருந்து விருது பெற்றுக் கொண்டதை இன்றும் நினைவு கூர்ந்து வரும் இவர் இது வரை பெற்றுள்ள கௌரவங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

- வடமத்திய மாகாணத்தில் 'கலாபூஷணம்' தேசிய விருது பெற்ற முஸ்லிம் ஒருவர்.
- பெரும்பான்மை சமூக தேசிய பாடசாலைகளுடன் நடைபெற்ற தெரிவில் மாகாணத்தில் சிறந்த அதிபராக தெரிவு செய்யப் பட்டு ஜனாதிபதியிடம் விருது பெற்ற முஸ்லிம் அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெரும்பான்மை அதிபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட தொழிற்சங்கம் ஒன்றில் அகில இலங்கைத் தலைவராக முதன் முறையாக தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் இவர்.

- வடமத்திய மாகாணத்தில் தமிழ் மொழியில் அதிக நூல்களை வெளியிட்டும், தொகுத்தும், எண்ணிக்கையில் அதிக ஆக்கங் களைப் படைத்துள்ள ஒருவர்.

- தேசிய அளவிலும், மாகாண அளவிலும் அதிக கௌரவிப்புக் களையும், பொன்னாடை போர்த்தல்களையும் மாகாணத்தில் பெற்றுள்ள முஸ்லிம் இவர் மட்டுமே.

- போட்டிப் பரீட்சைகள் மூலம் இலங்கை அதிபர் சேவையின் இரண்டாந்தரத்தையும், முதலாந்தரத்தையும் வடமத்திய மா காணத்தில் பெற்ற முஸ்லிம் அதிபர்.

பதவியிலிருந்து ஓய்வுபெற்றாலும் இன்றும் முனைப்புடன் சமூக, இலக்கியச்சேவைகள் புரிந்து வரும் இவரின் முகவரி :

Anbu Javaharsha.
20, Jayanthi Mawatha,
Anuradhapura.
Tel : 025-2223788

பிற்சேர்க்கை:

1. இவர் 'காலி' (Galle) யைப் பூர்வீகமாகக் கொண்டவர்.
2. ஐம்பதுகளில் சுதந்திரன், தமிழ், இன்பம், வீரகேசரி ஆகிய இதழ்களில் 'அன்புதாசன்' எனும் புனைப்பெயர் கொண்டு கவிதைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார்.

பதிவு 143

ஏ.எம். இஸ்ஸடீன்

எழுத்துத்துறை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், நாவலப்பிட்டிய தேர்தல் தொகுதி, பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நாவலப்பிட்டிய - மேற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த அப்பாஸ் முஹம்மது இஸ்ஸடீன் அவர்கள் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவராவார்.

1928ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி பிறந்த இஸ்ஸடீன் அவர்கள் நாவலப்பிட்டிய கதிரேஷன் கல்லூரியில் ஆரம்பக் கல்வியினை தமிழ்மொழியில் பெற்றார். அக்கால கட்டங் களில் தொடர்ச்சியாகக் கல்வியினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் எமது சமூகத்தினருக்குக் குறைவாகவே கிடைத்தது. குறிப்பாக கல்வியின் முக்கியத்துவம் உணரப்படாதிருந்த அந்தக் கால கட்டத்தில் பொருளாதார நெருக்கடிகளும் கல்விக்குப் பெருந்தடையாக இருந்து வந்தன.

சுய முயற்சியின் பலனாக தமிழ் அறிவை (குறிப்பாக எழுத்தறிவை) வளர்த்துக் கொண்ட இஸ்ஸடீன் அவர்கள் 'பள்ளிவாசல்களும், கதீர்மார்களும்' எனும் தலைப்பில் தனது கன்னி ஆக்கத்தினை எழுதினார். அக்கட்டுரை 1955ம் ஆண்டில் 'தினகரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை பிரசுரித்தது. இதிலிருந்து 'இஸ்லாம்' மார்க்கம் தொடர்பான பல்வேறு தலைப்புக்களில் கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதியுள்ளார்.

நாவலப்பிட்டிய 'அப்பாஸ்' குடும்பத்தைச் சேர்ந்த இவர் ஒரு வியாபாரி. ஆனால், தூய தமிழ்மொழியை நேசிப்பவர். நான்கு வார்த்தையானாலும் நல்ல தமிழில் அடுக்கு மொழியிலே எதுகை மோனையுடன் பேசவும், எழுதவும் பழக்கப்பட்டவர். நல்லதைப் பாடவும், தீயதைச் சாடவும் வல்லவரான இவரது சாதாரண பேச்சிலும் கவிதை நயம் கலந்திருக்கும். 1958ம் ஆண்டிலிருந்து சன்மார்க்கப் பணிபுரிந்து வரும் இவர் 'இஸ்லாமிய பிரசார இயக்கத்தை' வளர்த்தெடுத்தவர்களுள் முதன்மையானதொருவராகத் திகழ்கின்றார். பேனா முனையால் இவர் சாதித்தவைகள் பல! முஸ்லிம் அமைப்புக்கள், பள்ளிவாசல்கள் போன்றவற்றில் பொறுப்புள்ள பதவிகளை வகித்து அனுபவம் பெற்றவர். இஸ்லாத்துக்கு முரணான, சமுதாயத்தில் பாதகமான ஏதாவதொன்று நடக்குமானால் துணிவுடன் தட்டிக் கேட்கக் கூடிய வல்லமை படைத்தவர்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் சோதனைகளை சாதனைகளாக் குவதில் தனக்கென தனிப்பாணியினை வகுத்துக் கொண்டிருந்த இவர் இலக்கிய உலகில் ஒரு இலைமறை காயே. நூற்றுக்கும் மேற்பட்ட சிறு பிரசுரங்களை வெளியிட்டு தனது கருத்துக்களை மக்கள் முன்வைப்பதில் வெற்றி கண்டுள்ள இவர் ஒரு எழுத்தாளரைப் போன்றே சிறந்த பேச்சாளருமாவார்.

இஸ்ஸடீன் அவர்களால் இதுவரை இரண்டு புத்தகங்கள் எழுதி வெளியிடப்பட்டுள்ளன.

1. *இஸ்லாம் பேசுகிறது.*
1967ம் ஆண்டில் நடைபெற்ற அரபு - இஸ்ரேல் யுத்தத்தின் போது உலக முஸ்லிம்கள் சந்தித்த தோல்விகள்! அல்-

அக்ஸாவின் இழப்பு! ஈராக் - ஈரானிய, குவைத் - ஈராக்கிய யுத்தங்கள், ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான், காஸ்மீர், அல் ஜீரிய முஸ்லிம்கள் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்ற அக்கிரமம்! பலஸ்தீன் முஸ்லிம்களின் பரிதாப நிலை போன்ற வைகளுக்கு அடிப்படையான காரணத்தினை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

1997ம் ஆண்டிலே தனது முதல் நூலினை இஸ்ஸதீன் வெளியிட்டார். இவரின் அனுபவம், மத அறிவு, உலகளாவிய ரீதியில் முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றிய தெளிவு போன்றவற்றை இந்நூலில் அவதானிக்க முடிகின்றது.

2. *நாவலப்பிட்டிய முஸ்லிம்களின் வரலாற்றுக் குறிப்பும், நகர அமைப்பும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக நோக்குமிடத்து முஸ்லிம்களின் வரலாறுகள் பதியப்படாத நிலையில் முஸ்லிம்களால் தத்தமது சமூகத்துக் கும், தேசத்துக்கும் ஆற்றிய தொண்டுகள் காலத்தால் அழிந்து விடுகின்றன. இஸ்ஸதீன் அவர்கள் ஒரு சிறிய பரப்பு என்றாலும் நாவலப்பிட்டிய நகரத்தில் முஸ்லிம்களின் வரலாற்றை இந் நூலின் மூலமாக ஆவணப்படுத்த எத்தனித்துள்ளார். இந்நூல் 2001ம் ஆண்டில் வெளிவந்தது.

தன்னுடைய சமூக உணர்வுகளுக்கு அடிப்படையை வழங்கிய உவைஸிப்னு அப்துல் ஹமீட் ஆலிம் அவர்களையும், சமூக உணர்வுடன் கூடிய தனது எழுத்துப் பணியினை நெறிப்படுத்திய 1965 களில் நாவல் நகரிலிருந்து வெளியான 'முன்னோடி' பத்திரிகையின் ஆசிரியர் எச்.எம்.பி. மொஹிடீன் அவர்களையும் அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இஸ்ஸதீன் அவர்கள் ஹமீத் லெப்பே சித்தி உம்மா அவர்களின் அன்புக் கணவராவார். இத்தம்பதி யினருக்கு பஷீர், முஸம்மில் (மௌலவி) உமைரா (ஆசிரியை), சீத்தீக்கா, தாஹா, ஆயிஷாபேகம் ஆகிய அன்புச் செல்வங்களுளர்.

இவரின் முகவரி:

A.M. IZZADEEN
22/19, Abbas Manzil
Soysakella
Nawalapitiya.

பதிவு 144

எஸ்.எம். அறூஸ்

ஊடகத்துறை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பொத்துவில் தேர்தல் தொகுதி, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில், அட்டாளைச்சேனை - 9 கிராம சேவகர் எல்லைக்குள் வசித்து வரும் சம்சுதீன் முஹம்மது அறூஸ் வளர்ந்து வரும் ஓர் ஊடக வியலாளராவார்.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி சம்சுதீன், கலிமத்தும்மா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த அறூஸ் தனது ஆரம்பக் கல்வியை அட்டாளைச்சேனை அல்முனீறா மகாவித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலயத்திலும், உயர்கல்வியை அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகாவித்தியாலயத்திலும் பெற்றார். பின்பு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கல் கற்கை நிலையத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைத்துறை டிப்ளோமா பாடநெறியினை 2002 / 2003 கற்கை ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளார்.

பாடசாலைகளில் கற்கும் காலத்திலிருந்தே பத்திரிகைக ளுக்கும், வானொலிக்கும் செய்திகள் எழுத வேண்டும் என்ற ஆசையும், ஆர்வமும் இவருக்கிருந்தது. இவர் 1996 இன் இறுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் எழுதத் தொடங்கினார். இவரின் முதலாவது ஆக்கம் 1997.02.05ம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன விளையாட்டுச் செய்தியில் ஒலிபரப்பானது. முதல் செய்தியின் தலைப்பு 'அட்டாளைச்சேனை லக்கி வென்றது' என்பதாகும். அதேபோல பத்திரிகைத்துறையில் இவர் எழுதிய முதல் செய்தி 'அட்டாளைச் சேனை பொதுநூலகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்' எனும் தலைப்பில் 'நவமணி'யில் பிரசுரமானது. நவமணிக்கும் தொடர்ச் சியாக எழுத ஆரம்பித்தார். அத்துடன் 'நவமணி' வாசகர் வட்டத்தை 2000ம் ஆண்டு டிசம்பரில் ஆரம்பித்தார். இதன் தலைவரும் இவரே.

2000ம் ஆண்டில் மட்டக்களப்பில் 'தினக்கதிர்' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதும் அப்பத்திரிகையின் அட்டாளைச்சேனை நிருபராக நியமிக்கப்பட்டார். பின்பு 2002ம் ஆண்டில் வீரகேசரி பத்திரிகையில் நிருபராக இணைந்தார்.

'வீரகேசரி' பத்திரிகையில் இவர் முனைப்புடன் செய்தி எழுதி வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக அரசியல் விவகாரங்கள், பிரதேசச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், விமர்சனச் செய்திகள் போன்றவற்றை அட்டாளைச்சேனை நிருபராக நின்று எழுதி வருகின்றார். இவரின் பல செய்திகள் வீரகேசரியில் பிரதான செய்திகளாகவும், முன்பக்க செய்திகளாகவும் பிரசுரமாகியி ருக்கின்றன.

'பாடசாலைகளைப் பற்றிய அறிமுகம்' கேசரியில் இடம்பெற வேண்டும் என்ற இவரின் எண்ணத்தைக் கேசரி நிர்வாகத்தினர் ஏற்றுக் கொண்டதனையடுத்து கேசரியின் 75 வருட வரலாற்றில் முதற்தடவையாக 2003.10.20ம் திகதி அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பற்றிய அறிமுகத்தை இவர் எழுதினார். இதைத் தன்னுடைய ஊடகத்துறை அனுபவங்களில் மறக்க முடியாத நிகழ்வாகக் கருதுகின்றார்.

அதேநேரம் பல உண்மையான செய்திகளை எழுதப் போய்

பலவிதமான பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் முகம்கொடுத் துள்ளார். 'நடுநிலையான, உண்மையான, மக்கள் பிரச்சினைகளை துணிவுடன் எழுதுவதால் அடிக்கடி எனக்கு சவால்கள் ஏற்படுகின்றன. சவால்களை எதிர்கொள்கின்றவனே சுதந்திரமான பத்திரிகையாளன் என்று நினைக்கின்றேன்....' என்று கூறும் அறூஸ் தமது பிரதேசத்தில் சுதந்திரமாகவும், நடுநிலையாகவும் எழுதும் பத்திரிகையாளர்களின் நலன்களைப் பேணுவதற்காக சுதந்திர பத்திரிகையாளர் நலன்காக்கும் சங்கத்தை ஸ்தாபித்து அதன் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

விளையாட்டு தொடர்பான செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதுவதில் இவர் விசேட ஆர்வம் காட்டி வருகின்றார். குறிப்பாக தேசிய கிரிக்கட் அணியில் முஸ்லிம் கிரிக்கட் வீரர்கள் ஓரங்கட்டப் படுவதை பல சந்தர்ப்பங்களில் ஆதாரபூர்வமாக எழுதியுள்ளார். உதாரணமாக ''கிரிக்கட் தெரிவுக் குழுவினால் ஓரங்கட்டப்படும் நவீட் நவாஸ், அஸ்தமித்துப் போன கிரிக்கட் நட்சத்திரம் அர்ஷாத் ஜூனைத்" போன்ற கட்டுரைகளைக் குறிப்பிடலாம்.

தனது எழுத்துலக, ஊடகத்துறை ஈடுபாட்டுக்குக் காரண கர்த்தாக்களாகவும், ஆலோசகர்களாகவும் இருந்த நவமணி பிரதம ஆசிரியர் எம்.பீ.எம். அஸ்ஹர், நவமணி உதவி ஆசிரியர் சத்தார், தினக்கதிர் ஆசிரியர் கதிர்காமத் தம்பி, ஆர்.எம். அஸ்ரப் அலி (இ.ஒ.கூ) எம்.ஐ. சிஹாமுத்தீன், மற்றும் தனது குடும்பத்தினரை அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவரின் முகவரி:

S.M. Aroos
245, Union Place
Addalaichenai - 9
067-2277396

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 145

எம்.ஆர்.கே. மவ்பியா

ஊடகத்துறை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தனக்கல்லை தேர்தல் தொகுதி, அத்தன கல்லை பிரதேச செயலாளர் பிரிவில், கஹட்டோவிட்ட கிராம சேவகர் எல்லையில் வசித்து வரும் திருமதி எம்.ஆர்.கே. மவ்பியா ஊடகத்துறையில் ஒரு குறிப்பிட்ட காலம் முனைப்புடன் செயலாற்றிய பெண் பத்திரிகை யாளராவார். சிரேஷ்ட பத்திரிகையாளரான மர்ஹூம் ஏ.எம். றசீது அவர்களின் சிரேஷ்ட புதல்வியான இவர் தனது தந்தையின் வழிகாட்டலிலே பத்திரிகைத்துறையில் பாதம் பதித்தமை குறிப்பிடத்தக்கது.

1961ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07ம் திகதி முஹம்மட் றசீட், உம்முல் கைரியா தம்பதியினரின் புதல்வியாக இம்மண்ணில் ஜனனித்த 'மவ்பியா' கம்/கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலயம், கம்/கஹட்டோவிட்ட அல்பத்ரியா மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவியாவார். கல்விப் பொதுத் தாரதர உயர்தர கலைப்பிரிவில் தேறியுள்ள இவர் 1982.01.07ம் திகதி முதல் 'தினகரன்' பத்திரிகையின் அத்தனகல்லை நிருபராக நியமனம் பெற்றார்.

இவர் நிருபராக நியமனம் பெற்றதும் ''பேதத்தை மறந்து

ஊருக்கு உழைப்போம்" என்ற தலைப்பில் எழுதிய செய்தியே முதற்செய்தியாகும். இதிலிருந்து சுமார் பத்தாண்டு காலத்துக்குள் அறுநூற்றுக்கும் மேற்பட்ட செய்திகளை எழுதியுள்ளார். பிரதேச செய்திகள், மொழிபெயர்ப்புச் செய்திகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுகள் என்பன இவற்றுள் அடங்கும்.

எமது இலங்கையைப் பொருத்தமட்டில் இளம் முஸ்லிம் பெண்கள் பத்திரிகைத்துறையில் ஈடுபடுவது மிகமிகக் குறைவு. குறிப்பாக பெற்றோர் இத்துறையில் ஈடுபட வாய்ப்பினை வழங்குவ தில்லை. ஆனால் 'மவ்பியா' ஊடகத்துறையில் ஈடுபாடு கொள்ள அவரின் தந்தையாரே மூலகாரணமாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பத்திரிகைத்துறையில் அதிக ஆர்வம் காட்டி வந்த 'மவ்பியா'வின் தந்தை 'மர்ஹூம்' ஏ.எம். றசீது அவர்கள் தனது மகளை ஒரு பத்திரிகையாளராகக் காண வேண்டும் என ஆசைப்பட்டமை ஏனையவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும்.

திருமணத்தின் பின்பும் சிறிது காலம் பத்திரிகைத்துறையில் இவர் ஈடுபாடு கொண்டிருந்தார். மவ்பியாவின் அன்புத் துணைவர் எம். ஜமால்தீனும் இலக்கியத்துறை ஈடுபாடுமிக்கவர். 1977ம் ஆண்டு முதல் எழுதிவரும் ஜமால்தீன் வானொலிக் கவியரங்குகளிலும், மேடைக் கவியரங்குகளிலும் அதிகளவில் பங்குபற்றி வருபவர். அத்துடன் பல்வேறுபட்ட வில்லிசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளதோடு வில்லிசை நிகழ்ச்சியில் 'கடம்' வாசிப்பவராகவும் திகழ்ந்து வருகின்றார்.

இருப்பினும் குடும்பப் பொறுப்புக்கள் அதிகரித்தமையினால் தொடர்ந்து பத்திரிகைத்துறை ஈடுபாடு இவருக்குக் கடினமாக இருந்தது. எனவே 1991ம் ஆண்டில் பத்திரிகை நிருபராகப் பணியாற்று வதிலிருந்து விலகிக் கொண்டார். எவ்வாறாயினும் இடைக்கிடையே இவரின் சில ஆக்கங்களை தேசிய பத்திரிகையில் காண முடியும்.

சுமார் பத்து ஆண்டு காலம் பத்திரிகை நிருபராக கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றிய காலத்தில் தனக்கு ஒத்துழைப்பினையும், வழிகாட்டல்களை யும் நல்கிய சிரேஷ்ட பத்திரிகையார் என்.எம். அமீன் அவர்களையும், லேக்ஹவுஸ் முன்னாள் உள்நாட்டு செய்தி ஆசிரியர் நிஸ்ஸங்க பெர்னான்டோ அவர்களையும் அன்புடன் நினைவு கூர்ந்து வரும் மவ்பியா, ஜமால்தீன் தம்பதியினருக்கு பாத்திமா முஜாஸா, பாத்திமா ஜுரைஸா ஆகிய இரண்டு அன்புச் செல்வங்களுளர்.

இவரின் முகவரி :

Mrs. M.R.K. Mahfiya
33/B/1,
Kahatowita - 11144
033-2278257

பதிவு 146

எம்.யூ.எம். ஜிப்ரி

எழுத்துத்துறை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம தேர்தல் தொகுதி, பியகம பிரதேச செயலாளர் பிரிவில், மாகோலை வடக்கு கிராம சேவகர் எல்லையில் வசித்து வரும் முஹம்மது உதுமான் முஹம்மது ஜிப்ரி அவர்கள், எம்.யூ.எம். ஜிப்ரி, போர்வை பாயிஸ் ஜிப்ரி ஆகிய பெயர்களில் எழுதி வரும் சிரேஷ்ட எழுத்தாளர்களில் ஒருவராவார்.

1940ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி முஹம்மது உதுமான் தம்பதியினரின் புதல்வராக இம்மண்ணில் ஜனனித்த ஜிப்ரி அவர்கள் கொடப்பிட்டிய சாதாத் மகாவித்தியாலயம், கொழும்பு ஹமீத் அல்-ஹுஸைனியா மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரா வார்.

ஜிப்ரி அவர்கள் பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தில் கடமையாற்றி தற்போது அரசகரும மொழிகள் திணைக் களம், அரசகரும ஆணைக்குழு ஆகியவற்றில் போதனாசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். அத்துடன் இவர் ஒரு சிறந்த வர்த்தகரும் கூட.

ஒரு எழுத்தாளராக, கவிஞராக, பாடகராக எழுத்துத் துறையிலும் தனது பங்களிப்பை அமைதியாக நல்கி வரும் போர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிஸ் ஜிப்ரி அவர்களின் முதலாவது ஆக்கம் 1955ம் ஆண்டு 'கல்யாணத்தரகர்'எனும் தலைப்பில் தினகரனில் அரங்கேறியது. அன்றிலிருந்து இன்றுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளையும், ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். இவரின் எழுத்துக்களில் இஸ்லாமிய சமூக, சமய கருத்துக்களைக் காண முடியும்.

இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, மித்திரன் வாரமலர், தினக்குரல் ஆகிய தேசிய பத்திரிகைகளிலும், அவ்வப்போது சில சஞ்சிகைகளிலும் இடம்பெற்று வருகின்றன. மித்திரன் வாரமஞ்சரியில் சுமார் ஒன்றரை வருடங்கள் தொடராக இடம்பெற்ற 'இஸ்லாமிய வரலாற்றில் ஒரு ஏடு' என்ற இஸ்லாமிய நீதிக் கதைகளைத் தொகுத்து 2004 அக்டோபரில் 'இஸ்லாமிய நீதிக்கதைகள்' எனும் புத்தகத்தை வெளியிட்டார். 84 நீதிக்கதைகள் அடங்கிய இந்நூல் ஜிப்ரியின் முதலாவது நூலாகும்.

உலகளாவிய ரீதியில் தமிழ்மொழி மூல நூல்களை பதிவுக்குட்படுத்தி வரும் திரு.என். செல்வராஜா அவர்களின் சர்வதேச தமிழ் நூல் பதிவுத்திரட்டான நூல்தேட்டம் நான்காம் தொகுதியில் இந்நூல் பதிவாகியுள்ளது. விபரம் வருமாறு:

நூலின் தலைப்பு : - இஸ்லாமிய நீதிக்கதைகள் மூல ஆசிரியர்: எம்.யூ.எம். பாயிஸ் ஜிப்ரி, முதலாவது பதிப்பு : அக்டோபர் 2004, வெளியீடு : ஏ.ரீ. பிரிண்டர்ஸ், பக்கங்கள் 11+84, விலை 60/-, அளவு 18x12.5cm

குறிப்பு :- இஸ்லாமிய வரலாற்றில் நபிமார்கள், நபித்தோழர்கள், இமாம்கள் (மதவழிகாட்டிகள்) வாழ்வில் நடந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் நூலாசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். இப்புத்தகத்தில் மொத்தம் 84 நீதிக்கதைகள் இடம்பெற்றுள்ளன. படிப்பதற்குச் சுவையாகவும், படிப்பினைக்குரியதாகவும், எழுதப்பட்டுள்ள இந்நீதிக்கதைகள் மித்திரன் வாரமலரில்

தொடர்ச்சியாகப் பிரசுரமானவை. வாழ்க்கைத் தத்துவம், பண்பாடு, மரபுவழி, சமூக சமய நெறி ஆகியன உட்பட நானாவித அம்சங்களையும் இந்த நீதிக்கதைகள் தெளிவுபடுத்துகின்றன.

1965ம் ஆண்டு தொடக்கம் ஊடகத்துறையிலும் இவர் தனது பங்களிப்பினை நல்கி வருகின்றார். தற்போது வீரகேசரி - கம்பஹா மாவட்ட மேலதிக நிருபராகவும், தினக்குரல் பத்திரிகையின் கம்பஹா நிருபராகவும் பணியாற்றி வருகின்றார். ஊடகத்துறையில் பக்கசார் பற்ற செய்திகளை எழுத வேண்டும் என்பதே இவரின் எதிர்பார்ப்பாகும்.

தனது எழுத்துலகப் பயணத்துக்கும், ஊடகவியல்துறை ஈடுபாட்டுக்கும் காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் என்ற வகையில் அல்ஹாஜ் ஏ.எம். உவைஸ், மர்ஹூம்களான எம்.எஸ்.முஹம்மது, எம்.ஏ.ஸி. முஹம்மத் ஆகியோரை அன்புடன் நினைவு கூர்ந்துவரும் இவர் கமருன்னிசாவின் அன்புக் கணவராவார். இத்தம்பதியினருக்கு ஸஹ்தி எம். ஜிப்ரி, முஹம்மத் முஜீபர், பாத்திமா நுஸ்ரா, அஸாத் ஜிப்ரி, ஸஹ்ரா ஜிப்ரி, ரிசாத் ஜிப்ரி ஆகிய அன்புச் செல்வங்கள் உளர்.

இவரின் முகவரி :

M.U.M. Jiffry
35/24, Fathima Gaurden.
Makola (N)
011-2917493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 147

ஏ.எல்.எம். ஸும்ரி

எழுத்துத்துறை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், தெவிநுவர தேர்தல் தொகுதி, திக்குவல்லை பிரதேச செயலாளர் பிரிவில், திக்குவல்லை யோனகபுர கிராமசேவகர் பகுதியில் வசித்து வரும் அலவி லாஃபிர் முஹம்மது ஸும்ரி அவர்கள் 'திக்குவல்லை ஸும்ரி' எனும் பெயரில் எழுதிவரும் எழுத்தாளராவார்.

1965ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் திகதி அலவி லாஃபிர், ஸித்தி சுபைதா தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த ஸும்ரி அவர்கள் திக்குவல்லை - மின்ஹாஜ் மகாவித்தியாலயம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். வணிகமாணி (B. Com) பட்டதாரியான இவர் தற்போது இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் முகாமைத்துவப் பயிலுனராகப் பணியாற்றி வருகின்றார்.

1980 களின் ஆரம்பத்திலிருந்து எழுத ஆரம்பித்த இவரின் கன்னிக் கவிதை 'விதி' எனும் தலைப்பில் தினகரனில் (1980) பிரசுரமானது. அதேபோல இவரின் முதல் நாடகம் 1985.11.26ம் திகதி 'தகுதிகள் தடுமாறுகின்றன' எனும் தலைப்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகியது.

இதிலிருந்து அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை வானொலிக்கு எழுதியுள்ளார். அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும் 'ஊடுருவல்' சமூக சித்திரத்தில் இடைவிடாது தொடர்ந்தும் எழுதி வருகின்றார். இதுவரை சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பிரதிகள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர இலங்கையின் தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்பன பிரசுரமாகி வருகின்றன. சமூக உணர்வுமிக்க, பிரதேச மனங்கமழும் இவரின் ஆக்கங்கள் சமூகத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்துவதற்கும் தவறுவதில்லை.

தென்னிலங்கையில் நீண்ட காலமாக விளையாட்டுப் போட்டிகள், மீலாத்விழாக்கள், கதம்ப நிகழ்ச்சிகள், புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகளில் மேடை அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் செயற்படும் இவர் இதுவரை பல மேடை நாடகங்களை எழுதி, தயாரித்து நெறிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 1987ல் மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தின் 'தென்னமுதம்' சஞ்சிகையினதும், 1992ல் பேராதெனிய பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகையினதும் இதழாசிரியராகவும், 'இனிமை' கவிமஞ்சரி, 2001ல் மின்ஹாஜ் தேசிய பாடசாலையின் 'மின்ஹாஜ்' மலர் ஆகியவற்றுக்கு உதவியாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

1987ம் ஆண்டு முதல் இஸ்லாமிய கீதங்கள் இயற்றல், பாடல் என்பவற்றுடன் புகைப்படத்துறையிலும், அரபு எழுத்தணித்துறையிலும் ஆர்வமிக்கவராகவும் காணப்படுகின்றார். நாட்டின் பல ரோணியோ ஏடுகள், சஞ்சிகைகள், கையெழுத்துப் பிரதிகளின் தயாரிப்பாளராகவும், அழகமைப்பாளராகவும் இருந்துள்ளமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதே.

இவரின் இத்தகைய சேவைகளை கௌரவித்து 1994 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவல்லை மின்ஹாஜ் ம.வி. பழைய மாணவர் சங்கம் 'கலைத் தாரகை' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது. மாவட்ட ரீதியிலும், மாகாண ரீதியிலும், தேசிய ரீதியிலும் பல போட்டிகளில் பங்கேற்று பல பரிசில்களை வென்றுள்ள இவர் தனது இலக்கியப் பயணத்துக்கு காரண கர்த்தாக்களாகவும், வழிகாட்டிகளாகவும் இருந்த தனது அன்புப் பெற்றோரையும், மைத்துனர் திக்குவல்லை இனாயாஹ், திக்குவல்லை ஸப்வான் ஆகியோரையும் அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவரின் முகவரி :

Dickwella Zumri
282, Yonakapura.
Dickwella.

பதிவு 148

எம்.எச்.எம். ஹாரித்

ஊடகத்துறை

மேல்மாகாணம், கம்பஹா மாவட்டம், அத்தனகல்ல தேர்தல் தொகுதி, அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில், திஹாரிய (வடக்கு) கிராமசேவகர் பகுதியில் வசிக்கும் எம்.எச். முஹம்மத் ஹாரித் அவர்கள் ஒரு ஊடகவியலாளரும், எழுத்தாளருமாவார். மண முடித்த பின்பு கம்பஹா மாவட்டத்தில் வாழ்ந்து வந்தாலும் இவர் பிறந்த இடம் காலி மாவட்டத்தின் 'கிந்தோட்டை' எனும் பிரதேசமாகும்.

1950ம் ஆண்டு மே மாதம் 05ம் திகதி முஹம்மது ஹனிபா, ரஹ்மதுல் ஜென்னா தம்பதியினரின் புதல்வராக கிந்தோட்டையில் பிறந்த ஹாரித் காலி - கிந்தோட்டை குருந்துவத்த ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். கற்கும் காலத்திலிருந்தே எழுத்தார்வமும், வாசிப்புத்திறனும் இவருக்கு இயல்பாகவே ஏற்பட்டது. கவிதைகள் புனைவதிலும், கதைகள், கட்டுரைகள் எழுதுவதிலும் ஆர்வமிக்க இவரின் கன்னி ஆக்கம் 1979 இல் தினபதி பத்திரிகையில் இடம்பெற்றது. சுமார் ஐம்பது கவிதைகள், நூற்றுக்கணக்கான கதைகள், கட்டுரைகளை எழுதியுள்ள இவரின் ஆக்கங்கள் தினபதி, சிந்தாமணி, தந்தி, ஈழமணி, சூடாமணி, ஜம்ஆ, அல்-அரப், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சி கைகளிலும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் தென்னிந்தியாவிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவரும் மாத சஞ்சிகைகளான முத்துச்சுடர், குர்ஆனின் குரல், ரஹ்மத், நர்கிஸ், அஸ்லுன்ஸ்ன்னா ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. தனது சொந்தப் பெயரிலே எழுதிவரும் இவர் அதிகளவில் இஸ்லாமிய அடிப்படையிலான ஆக்கங்களையே எழுதி வருகின்றார்.

கிந்தோட்டை, கொடவத்தை 'பௌமீ விலா' வில் வசித்து வந்த போது 1979.10.01ம் திகதி அக்மீமனப் பகுதியின் தினபதி - சிந்தாமணி செய்தி நிருபராக ஹாரித் நியமிக்கப்பட்டார். இவரின் நிருபர் இல 34. 1987 இல் திருமண முடிக்கும் வரை காலிமாவட்டம் சார்ந்த பல்வேறுபட்ட செய்திகளை இவர் எழுதி வந்தார். பின்பு 1997ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி முதல் எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர் (ஸிலோன்) லிமிட்டட்டின் 'வீரகேசரி' பத்திரிகையின் கம்பஹா நிருபராக நியமனம் பெற்றுள்ளார். அதிலிருந்து இன்றுவரை கம்பஹா மாவட்ட செய்திகளையும், பிரதேச செய்திகளையும் வீரகேசரிக்கு எழுதி வருகின்றார். அதேபோல 'தினமுரசு' பத்திரிகையில் 'தினமுரசு - ஆன்மீகம்' பகுதியில் பல ஆக்கங்களை 'திஹாரிய ஹாரித்' எனும் பெயரில் எழுதி வந்துள்ளார். 'நவமணி' பத்திரிகைக்கும் அவ்வப்போது செய்திகளும், ஆக்கங்களும் எழுதுவதுண்டு.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினராகவும், கம்பஹா மாவட்ட முஸ்லிம் எழுத்தாளர் ஒன்றியத் தலைவராகவும் செயற்பட்டு வரும் 'ஹாரித்' இலங்கை முஸ்லிம்களுக்கென ஒரு தேசிய நாளிதழ் தேவை என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளார்.

உண்மையிலே எமது இலங்கையைப் பொருத்தமட்டில் முஸ்லிம்களுக்கென ஒரு தேசிய நாளிதழ், முஸ்லிம்களுக்கென இலக்றோனிக் ஊடகங்கள் இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இது தொடர்பாக எமது சமூகத்தின் புத்திஜீவிகள், கல்விமான்கள், சமூக உணர்வுமிக்க ஊடகவியலாளர்கள் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டி, எத்தனையோ மாநாடுகளை நடத்தி வந்தாலும் கூட எமது

சமூகத்திலுள்ள சில தனவந்தர்கள் இதுபற்றி இதயசுத்தியுடன், சமூக நோக்கில் சிந்திக்கும் வரை இது சாத்தியாமாகப் போவதில்லை. ஆத்மீக சிந்தனையில் மாத்திரமே முளை சலவை செய்யப்பட்ட எமது பெரும்பாலான தனவந்தர்கள் சமூக ரீதியில் சிந்திக்கத் தலைப்படும் போது இன்னும் சில பரம்பரைகள் தாண்டிவிடலாம்.

ஹாரித் அவர்கள் எஸ்.எச். ஸித்தி ஸாஹிராவின் அன்புக் கணவராவார். இவருக்கு இர்ஷாத் அஹ்மத், பாத்திமா ஸல்ஹா ஆகிய இரண்டு அன்புச் செல்வங்களுளர். இவரின் முகவரி :

M.H.M. Harid
145, Kandy Rd.
Thihariya.
Kalagedihena
033 2288677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 149

அபூதாலிப்

ஊடகத்துறை

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், கலாவெவ தேர்தல் தொகுதி, 'கல்னேவ' பிரதேச செயலாளர் பிரிவில், நேகம (462) கிராம சேவகர் பகுதியைச் சேர்ந்த மயிதீன் பாவா - அபூதாலிப் அவர்கள் ஓர் ஊடகவியலாளரும், எழுத்தாளருமாவார்.

1952.12.17ம் திகதி மயிதீன் பாவா - பாத்தும்மா பீவி தம்பதியினரின் புதல்வராக நேகம்பஹ, நேகம கிராமத்தில் பிறந்த அபூதாலிப்; அ / நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

தொழில் ரீதியாக கெக்கிராவை வலயக் கல்விப் பணிமனை யில் ஆசிரிய ஆலோசகராக பணியாற்றிவரும் இவர் 1977ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி கஷ்டப் பிரதேச ஆசிரிய நியமனம் பெற்று மிகிந்தலைத் தொகுதியிலுள்ள கல்லஞ்சியாகம அறபா முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் தொழிலை ஆரம்பித்தார். 1981 / 82 காலப் பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்து சிறப்புக்குரிய ஆரம்பக் கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். பின்பு எட்டவீரவெவ முஸ்லிம் வித்தி யாலயம், நேகம முஸ்லிம் மகாவித்தியாலயம், பண்டாரபொத்தான

முஸ்லிம் வித்தியாலயம், கடாண்டுகம ஜாயா மகாவித்தியாலயம், மடாட்டுகம முஸ்லிம் வித்தியாலயம், உந்துருவெவ முஸ்லிம் வித்தியாலயம், நெல்லியகம முஸ்லிம் வித்தியாலயம், நேகம்பஹ சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

1988.11.09ம் திகதி கெக்கிராவை வலயக் கல்விப் பணிமனை யில் ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்ற அபூதாலிப் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், ஜேர்மனி தொழில்நுட்பக் கூட்டுழைப்பகம் (GT2), பிரித்தானிய சபை (ஆரம்பக் கல்வி ஆங்கிலமொழி செயற்றிட்டம்) (DELP) யுனிசெப் ஆகிய நிறுவனங்களில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார்.

எழுத்து, ஊடகத்துறைகளில் இவரின் பங்களிப்பினை அவதானிக்கும் போது பாடசாலையில் மாணவராகக் கற்கும் காலத்தில் 1967இல் 'மணல் எவ்வாறு உருவாகிறது..' என்ற ஆக்கத்தினை 'தினகரன்' பிரசுரித்தது. இதுவே இவரின் 'கன்னி' ஆக்கமாகும். அவ்வப்போது பலதரப்பட்ட ஆக்கங்களை இவர் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், சிந்தாமணி, தினபதி, சங்கமம், இடி, நவமணி போன்றவற்றில் இடம்பெற்றுள்ளன. 1981 / 82 கல்வி ஆண்டில் ஆசிரியர் கலாசாலையில் கற்கும் போது கலாசாலையின் 'கலையமுதம்' சஞ்சிகைக்குழு உறுப்பினராகப் பணியாற்றியதுடன் 'அழகு' எனும் தலைப்பில் உருவகக் கதையொன்றினையும் எழுதியுள்ளார். அதேபோல 1997 சர்வதேச ஆசிரியர் மட்டத்திலான சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

1984.01.01ம் திகதி தினகரன் 'நேகம்பஹ' நிருபராக நியமனம் பெற்றார். அன்று தொடக்கம் இன்றுவரை எவ்வித பிரச்சினைகளுமின்றி தினகரனில் பிராந்தியச் செய்திகளை எழுதி வருகின்றார். நூற்றுக்கணக்கான செய்திகளை எழுதியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூதாலிபின் செய்திகளில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலான நடுநிலைமைச் செய்திகள் பாராட்டுக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீலங்கா மீடியா போரம், அநுராதபுர மாவட்ட ஊடகவியலாளர் சங்கம், ரஜரட்ட நிருபர்கள் அமைப்பு, மீடியா லிங் போன்ற ஊடகத்துறை அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்று ஆக்கபூர்வமாக செயற்பட்டு வரும் இவர் பிரதேச ரீதியிலான பல்வேறுபட்ட சமூக, சமய அமைப்புக்களில் இணைந்து சமூக சேவையாற்றி வருகின்றார். மூன்று மொழிகளிலும் தேர்ச்சியுடைய இவர் ஒரு மேடைப் பேச்சாளரும், அறிவிப்பாளருமாவார். அத்துடன் கடந்த காலங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நூருல் இஸ்லாம், கவியரங்கம் போன்றவற்றிலும் தனது பங்களிப்பினை நல்கியுள்ளார்.

கழிகம்பு, கோலாட்டம் போன்ற இஸ்லாமிய மரபு ரீதியான கலைகளிலும், 'பாடல்' துறையிலும் சிறப்புப் பெற்று விளங்கும் இவர் சீனடி, சிலம்படி போன்ற வித்தைகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார். அபூதாலிப் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார். தனது எழுத்துத்துறை ஈடுபாட்டுக்குக் காரணகர்த்தாக்களான தனது ஆசான் ஏ.எல்.எம். காதர் (பாணந்துரை) எழுத்தாளர் மருதூர்க்கொத்தன், வீ.எம். இஸ்மாயில், எஸ்.எச். நி.ம்மத் ஆகியோரை அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவர்; ஆசிரியை ஓ.எல். ஜெமீலா உம்மாவின் அன்புக் கணவராவார். இத்தம்பதியினருக்கு மொஹமட் அப்ராஜ், மொஹமட் அப்னாஸ், பாத்திமா அப்ரா ஆகிய அன்புச் செல்வங்களுளர்.
இவரின் முகவரி :

M. Aboothalib
'Naseera Manzil'
Negama.
Negampaha - 50180
025 - 2250309

பதிவு 150

த. மீராலெவ்வை (அனலக்தர்)

எழுத்துத்துறை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மட்டக்களப்பு தேர்தல் தொகுதி, ஏறாவூர் - நகர்' பிரதேச செயலாளர் பிரிவில் ஏறாவூர் - 03A கிராம சேவகர் பகுதியில் வசித்து வரும் தம்பிலெவ்வை மீராலெவ்வை அவர்கள் இலங்கையில் மூத்த எழுத்தாளரும், கவிஞருமாவார். இவரின் எழுத்துத்துறையில்; மீராலெவ்வை எனும் இயற்பெயரை விட 'அனலக்தர்', ஏறாவூர் அனலக்தர் எனும் பெயரே பிரபல்யமானது. அதேபோல ரீ.மீரான், தாம்பூலவாயன், நையாண்டிக் கவிராயர், கோணங்கியார், குணசித்தன் ஆகிய பெயர்களிலும் எழுதி வருகின்றார்.

1944ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி தம்பிலெவ்வை, ஆசியா உம்மா தம்பதியினரின் இரண்டாவது பிள்ளையாக ஏறாவூர் முதலாம் குறிச்சியில் பிறந்த 'மீராலெவ்வை' அவர்கள் முப்பத்தேழு வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி 1999 இல் 55 வயது பூர்த்தியடைந்ததும்., ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெற்று ஆத்மீகத் தேடலில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

'அனலக்த'ரின் தந்தையாரும் ஒரு புலவராவார். அக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண மங்கள வாழ்த்துப் பாடுவதில் தம்பிலெவ்வை அவர்கள் பிரசித்திபெற்று விளங்கியுள்ளார். ஆதலால் புலமையும், கவித்துவச் செழுமையும் இவருக்கு தந்தை வழிச் சீர்வரிசை ஆயிற்று.

சிறு பராயத்திலேயே சிறந்த மாணாக்கராக, நடிகராகத் தளிர் நடைபோட்டு, புரட்சிக்கமால், அல்ஹாஜ் வை.எம்.ஏ. காதர் ஆசிரியர், திருவாளர் எஸ்.தம்பிராசா பண்டிதர் ஆகியோரின் நல்லாசிக்கும், நயத்தலுக்கும் ஆளானார்.

1961ம் ஆண்டு க.பொ.த. (சா/தர) பரீட்சையில் சித்திய டைந்தார். தந்தையின் மரணத்தின் பின் குடும்பப் பளுவைச் சுமக்க வேண்டிய பொறுப்புணர்வினால் உயர் கல்வி கற்கும் வாய்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து 1964 இல் மாணவ, ஆசிரியராகப் பதவியேற்றார். 1968 - 1969 காலப் பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் பொதுப் பயிற்சி நெறியை மேற்கொண்டார். அந்த இரண்டு வருடப் பயிற்சி அவரது தமிழறிவையும், கலைத்துறை சார் உணர்வினையும் புடம் போட்டது. கலாசாலையில் 'போராட்டம்', 'விடிவெள்ளி' முதலான நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தியதோடு மட்டுமன்றி தாமும் முக்கிய பாத்திரமேற்று நடித்து சிறந்த நடிகராக முத்திரை குத்தப்பட்டார்.

இவரது எழுத்துலகப் பயணம் 1962ம் ஆண்டிலிருந்து ஆரம்ப மாகியது. அவ்வாண்டு 'மருதமுனை இளைஞர் புத்துணர்ச்சி மன்றம்' அகில இலங்கை ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் இவரால் எழுதப்பட்ட கட்டுரை இரண்டாமிடத்தைப் பெற்றது. பத்திரிகைத் துறையில் இவரது முதல் கவிதை 'நோன்பிருப்போம்' எனும் தலைப்பில் 1970 நவம்பர் 24ம் திகதி 'வீரகேசரி'யில் பிரசுரமானது.

அதிலிருந்து இன்றுவரை எழுநூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள், அதிகளவிலான கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வு களை எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன்,

தினபதி, சிந்தாமணி, அபியுக்தன், தினக்குரல், வீரகேசரி, சுடர் ஒளி, முஸ்லிம்குரல், நவமணி, மித்திரன், மெட்றோ ஆகிய பத்திரிகைகளிலும், குமரன், மல்லிகை, தாயகம், மனிதன், அக்னி ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

கணித ஆசிரியராக கற்பித்தல் துறையில் கால்பதித்தாலும், தமிழ்த்துறை சார் கலையிலக்கியங்களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர் கவிஞர் அனலக்தர். யாப்பியல், அணியியல் முதலான ஐவகை இலக்கணங்களையும் கற்று மரபுவழி நின்றும், புதுக்கவிதை படிமங்களைத் தொட்டும் கவி புனைவதில் இவர் பாங்கு தனித்துவமானது. பழமைக்கும், புதுமைக்கும் பாலமாக இருந்து வரும் இவர் யாப்புக் கவிதையினைப் போல் கனதியும், கருத்தாழமும், கலாரசனையும், கொண்ட காரியக் கவிஞராகவும், புதுக்கவிதையினைப் போல் புரட்சிகர நோக்கும், போராடும் போக்கும், உள்ள புத்துலகப் படைப்பாளியாகவும் பிரசித்தமாகியுள்ளவர் என்றால் மிகையாகாது.

எழுத்தினைப் போலவே கவியரங்கு மேடைகளிலும் வரிகளை சோடிசேர்த்து, வாரிக் கொணர்ந்து வளமான கருத்துக்களை முன்வைப்பதில் இவர் புகழ்பெற்றவர். பல்வேறுபட்ட போட்டி நிகழ்ச்சி களில் பங்கேற்று கவிதை, நாடகத்துறைகளில் பல பரிசில்கள் வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே.

அறுபதுகளிலிருந்து எழுதி வந்தாலும், அனலக்தரின் முதலாவது கவிதைத் தொகுதி 'விதி வரைந்த கோலங்கள்' எனும் தலைப்பில் 2006ம் ஆண்டிலே (முதலாம் பதிப்பு மே - 2006) வெளி வந்தது.128 பக்கங்களைக் கொண்ட இக்கவிதைத் தொகுதியினை 'ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்' வெளியிட்டது. புத்தகத்தின் விலை 150/- ISBN இலக்கம் 955-1501-00-4, மொத்தமாக 82 கவிதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

தான் கலையிலக்கியத் துறையில் பாதம் பதிக்க முன்னோடியாய் இருந்தவர் மர்ஹூம் கவிஞர் புரட்சிக்கமால் அவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும், தனக்கு யாப்பிலக்கணங்களைக் கற்பித்த ஆசான் மர்ஹூம் எம்.எஸ்.எம். ஹரீஸ் அவர்களையும், ஊடக அனுசரணையாளர்களாக நின்ற திருவாளர்கள் எஸ்.டி. சிவநாயகம், எச்.எம்.பி. மொஹிதீன், செ. கணேசலிங்கம், எம்.பி.எம். அஷ்ஹர், டொமினிக் ஜீவா ஆகியோரையும் அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவரிடம் 'அனல் அக்தர்' எனும் பெயருக்கான விளக்கத்தைக் கோரிய போது அவர் தந்த பதில் பின்வருமாறு:

> ''பலர் சுட்டெரிக்கும் நட்சத்திரம் என்று கருத்துக் கொள்கி றார்கள்... அ.'.து ஓர் அரபுப் பதம். அப்பதத்தொடருக்கு மூன்று கருத்துக்கள் உள்ளன. 1. நானே நட்சத்திரம். 2. நானே சக்தி. 3. மகிமைப்படுத்தப் பட்டவன் நானே... இந்தக் கருத்து அடிப்படையில் அப்பெயரை நான் புனைப்பெயராகக் கொண்டேன்."

தமிழ் இலக்கியத்தில் பல்வேறு சாதனைகளைத் துணிவுடன் புரிந்துவரும் 'அனலக்தர்' தனது எழுத்துலக வாழ்க்கை பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

''நான் முற்போக்கு எழுத்தாளர் வட்டத்தில் முளையமாகி, முனைப்புடன் முன்னோடிகள் பலரை வரித்துக் கொண்டவன். அறுபது களின் பிற்கூற்றிலிருந்து எழுபதுகளின் கடைசி வரை என் எழுத்தாண்மை எல்லாராலும் உவக்கப்பட்டது. 1977 அரசியல் ப்ழிவாங்கல்கள் மூலம் பல இடங்களுக்கும் தொழில் ரீதியாகப் பந்தாடப்பட்டேன். பத்திரிகைத் தளத்தில் முற்போக்கு சிந்தனைகள் மழுங்கடிக்கப்பட்டு வந்தது. எச்.எம்.பி.முகைதீன் போன்ற பல முற் போக்குவாதிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். நானும் யாருக்கு எதை எழுதுவது என்ற விசனத்தோடும் விரக்தியோடும் 20 வருடங்களுக்கு மேலாக பத்திரிகைத் தளத்தை விட்டு ஒதுங்கியி ருந்தேன். இதனால் பின்வந்த எழுத்தாளர் 'இளசு'களுக்கு என்னைப் பற்றித் தெரியாது. 2002 ல் இருந்து முன்னரை விட முதிர்ந்த

வீச்சோடு இன்றுவரை ஒய்வுதியம் பெற்ற நிலையில் எழுதுகின்றேன். என் பணி தொடர அல்லாஹ் அருள் பாலிக்க வேண்டும்.....

அனலக்தர் அவர்கள் சரிவுத்தம்பி - கதிசா உம்மாவின் அன்புக் கணவராவார். இத்தம்பதியினருக்கு எம்.எப். பாத்திமா றிஸ்னா என்று ஒரு மகளுண்டு. இவரின் முகவரி:

T. Meera Lebbe,
547, Girl's School Rd.
ERAVUR - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 151

எம்.எம்.எம். கலீல் (கலைவாதி கலீல்)

எழுத்துத்துறை

வடமாகாணம், மன்னார் மாவட்டம், வன்னி தேர்தல் தொகுதியில் 'மன்னார்' கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 'மதாறு முஹைதீன் முஹம்மது கலீல்' அவர்கள் தற்போது பாணந் துறையில் வசித்து வருகின்றார். 'கலைவாதி கலீல்' எனும் பெயரில் பிரபலமான இவர் ஒரு பத்திரிகையாளரும், விமர்சகரும், நடிகரும், எழுத்தாளரும், கவிஞரும், கவின் கலைப்பாட விரிவுரையாளரும், பேச்சாளருமாவார்.

மன்னார் 'குடியிருப்பில்' புலவர் பரம்பரையைச் சேர்ந்த மதாறு முஹைதீன், மீரா உம்மா தம்பதியினரின் புதல்வராக 1943ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 18ம் திகதி பிறந்த கலீலின் குடும்பமே ஒரு கலைக் குடும்பமாகும். இவரின் மூத்த சகோதரர் வித்துவான் எம்.ஏ. றஹ்மான் புகழ்பெற்ற ஒரு தமிழறிஞர்; எம்.ஏ. கபூர் நாடறிந்த திரைப்பட ஒளிப்பதிவாளர், டைரக்டர்: 'மக்கள்' பத்திரிகையின் ஆசிரியரும், எழுத்தாளருமான 'மக்கள் காதர்' இவரின் மற்றுமொரு சகோதரரே; இளைய சகோதரன் சாஹுல் ஹமீத் ஒரு நாடகக் கலைஞர்; மர்ஹூம் முஹம்மது இப்றாஹீம் சிறந்த தையல் கலைஞர்.

மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயம், மன்னார் புனித

சவேரியார் ஆண்கள் கல்லூரி, பலாலி விசேட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான கலீல் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SRILANKA EDUCATIONAL ADMINIS TRATIVE) அதிகாரியுமாவார். தொழில் ரீதியாக - 1963ல் உதவி ஆசிரியராகத் தனது பணியை மன்னார் மறிச்சுக்கட்டியில் ஆரம்பித்த கலைவாதி கலீல், படிப்படியாக முன்னேறி பயிற்றப்பட்ட ஆசிரியரா கவும், அதிபராகவும் நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ளார். இறுதியாக தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியில் 'உப பீடாதிபதி' யாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றார். இவரின் ஆசிரியப் பணி 40 வருடங்களுக்கும் மேலானதாகும்.

1956ம் ஆண்டில் சுண்டிக்குளி சோமசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'லட்டு' சிறுவர் மாசிகையில் 'மறைந்த இருள்' எனும் இவரின் கன்னிச் சிறுகதை பிரசுரமானது. அதிலிருந்து இன்றுவரை சுமார் 50 சிறுகதைகளையும், 500 கவிதைகளையும், 400க்கு மேற்பட்ட கட்டுரை, விமர்சனம் உட்பட பல்துறை ஆக்கங்க ளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், தினபதி, வீரகேசரி, சுதந்திரன், நவமணி, மீள்பார்வை, கதம்பம், லட்டு, ஈழநாடு, பாமிஸ், சிரித்திரன், குயிலோசை, முகில், புத்தொளி, இன்ஸான், வெற்றிமணி, சிற்பக்கலை, தொழிலாளி, தேசாபிமானி, தீப்பொறி, மக்கள், கலைக்கடல், பார்வை, கடமை, செய்தி ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இடம்பெற்றுள்ளன.'கலைவாதி கலீல்' பல்வேறுபட்ட இலக்கிய, கலைத்துறைகளில் தனது பங்களிப்பினை வழங்கி வருபவர். எனவே துறைவாரியாக இவரின் பணிகளை நோக்குவது அவசியமானதாகும்.

கலைவாதி ஒரு பிரபல ஓவியராவார். ஓவியக்கலையை முறைப்படி பயின்றவர். ஓவியம், சிற்பம், அறபு எழுத்தணி, மரபு மற்றும் வர்த்தக ரீதியான ஓவியங்களை வரைவதில் கைதேர்ந்தவர். ''போர்ரைட்'' ஓவியங்களும் வரைவார். பேனர்கள் (பதாகைகள்), சுவரொட்டிகள், போஸ்டர்கள் வரைவதில் திறமைமிக்கவர். அழகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பெழுத்துக்கள் வரையக் கூடியவர். ஏராளமான நூல்கள், சிறப்பு மலர்கள் போன்றவற்றுக்கு முகப்போவியங்களும், பத்திரிகை களுக்குக் கதைப்படங்களும் வரைந்திருக்கிறார். அரச பாடநூல்க ளுக்கும் (தமிழ் மலர்) படம் வரைந்துள்ளார். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்ட இருபதுக்கும் மேற்பட்ட நூல்களுக்கு ஓவியம் வரைந்துள்ளார். பல சித்திர, சிற்ப, கைப்பணிக் கண்காட்சிகளை இலங்கையின் பல்திசைகளிலும் நடத்தியுள்ளார்.

ஓவியத்துறையைப் போலவே பத்திரிகைத் துறையிலும் இவர் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றார். அந்த நாட்களில் கண்டியிலிருந்து வெளிவந்த செய்தி, யாழ்-ஈழநாடு, தினபதி, தந்தி, தினகரன், போன்ற பத்திரிகைகளில் நிருபராகக் கடமையாற்றியிருக்கின்றார். தற்போது நவமணியின் நிருபராகக் கடமையாற்றி வருகிறார். அஷ்ஷர்ரா, பாமிஸ் மாசிகை போன்ற பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக்கின்றார். குயிலோசை, முகில், கலைக்கடல், மக்கள் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக் கின்றார். ஈழநாடு, பாமிஸ் மாசிகை, சிரித்திரன், தினகரன், நவமணி, புத்தொளி போன்ற பத்திரிகைகளில் பத்தி எழுத்தாளராகவும், முழுப் பக்கப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்திருக்கின்றார்.

கலைவாதி கலீல் அவர்கள் கடந்த முப்பத்தைந்து வருடங் களாக வானொலியோடு தொடர்பு வைத்திருக்கின்றார். வானொலியில் பல தொடர் நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார். அவற்றுள் சில பிரபல்யம் பெற்றன. இலக்கிய மஞ்சரி, சதுரச் சங்கமம், இலக்கியக் களஞ்சியம் ஆகியன இவரால் நடத்தப்பட்ட ஜனரஞ்சக நிகழ்ச்சி களாகும். மேலும் நூல் உலா, பிஞ்சு மனம் (கதைச்சொல்லுதல்) போன்ற நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளார். கலைக்கோலம், கவிதைக் களம் போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு குரல் கொடுத்துள் ளார். மாதர் மஜ்லிஸ் மகளிருக்கான நிகழ்ச்சியிலும் இவர் ஒரு தொடர் நாடகம் எழுதியிருப்பதோடு அதில் ஒரு பாத்திரத்தில் நடித்தும் உள்ளார்.

நூற்றுக்கணக்கான கவியரங்குகளிலும், கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளதோடு தலைமை வகித்துமுள்ளார். ஏராளமான நாடகங் களும், உரைச் சித்திரங்களும் எழுதியிருப்பதோடு அவற்றிற்குக் குரல் கொடுத்துமுள்ளார். நோன்பு, ஹஜ், மீலாத் போன்ற தினங்களில் இடம்பெறும் விசேட கவியரங்குகளில் பெரும்பாலும் தலைமைக் கவியாகப் பொறுப்பேற்றிருக்கின்றார். தொலைக் காட்சிகளில் சில கவியரங்குகளில் இவர் பங்கேற்றுள்ளார். அதேநேரம் இவரின் சில பேட்டிகளும் தொலைக்காட்சி சேவைகளில் இடம் பெற்றுள்ளன.

கலைவாதி கலீல், ஒரு சிறந்த நாடகக் கலைஞரும் டைரக்ட ருமாவார். அவரே எழுதி நெறிப்படுத்திய ஏராளமான மேடை நாடகங்கள் அவரால் மேடை ஏற்றப்பட்டுள்ளன. ஒருமுறை மன்னாரில் ஒரே மேடையில் மூன்று நாடகங்கள் என்ற மகுடத்தில் ஒரு நாடக விழாவை வெற்றிகரமாக நடத்தினார். அதில் பெண் குழந்தை யொன்றை புதைக்கும் காட்சியில் அராபியரின் வாழ்க்கைச் சரிதமும் அடங்குகிறது. ''புலித்தேவன்'' என்ற போராட்ட வீரனின் கதையையும் நாடகமாக்கியுள்ளார். 1990ம் ஆண்டுக்கு முன்னர் மன்னார் திறந்த வெளியரங்கில் தொடர்ந்து ஐந்து வருடங்களாக பௌர்ணமி தினத்தில் கலை விழாக்களை மாதாமாதம் ஒவ்வொரு பௌர்ணமி இரவு அன்றும் வெற்றிகரமாக நடத்தி வந்தார். பௌர்ணமி கலைவிழா நிகழ்ச்சி வடக்கில் மன்னாரில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் நடைபெற்றதும் இங்குதான். இக்கால கட்டத்தில் மன்னார் பிரதேசத்தில் வாழ்ந்த இலைமறை காய்களான கலைஞர்களை மேடையேற்றி அறிமுகம் செய்த பெருமை இவரைச் சாரும். கலைவாதி எழுதித் தயாரித்த புகழ்பெற்ற நாடகங்களில் நெஞ்சுக்கு நீதி, புலித்தேவன், வீரபாண்டிய கட்ட பொம்மன், உத்தம புத்திரன், அடிமை விலங்கு, இரும்புத்திரை. நக்கீரன், வஞ்சகா வாளை எடு! என்பன குறிப்பிடத்தக்கன.

கலைவாதி கலீலின் இலக்கியப் பயணத்தில் இதுவரை ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு வெள்ளி ரூபாய் (சிறுகதைத் தொகுதி)
2. உலகை மாற்றிய உத்தமர் (இயல், இசைச்சித்திரம்)
3. கருவறையிலிருந்து கல்லறைக்கு (புதுக்கவிதைகள்)
4. றோணியோக்கள் வாழுமா? (ஆய்வு நூல்)
5. ஓ பலஸ்தீனமே! (கவிதைத் தொகுதி)

தினகரன் நாளிதழில் அறுபது நாட்களாக பிரசுரமான ''எங்கிருந்தோ ஒரு ஜீவன்'' என்ற தொடர் நவீனம் எம்.டீ. குனசேன நிறுவனத்தினால் நூலாக்கத்திற்காகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. விரைவில் இந்நூல் வெளிவரவுள்ளது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் கொழும்பிலிருந்து ''இன்ஸான்'' எனும் ஒரு முற்போக்கு வார இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. 'இன்ஸான்' என்றால் மனிதன் என்று பொருள். அபூதாலிப் அப்துல் லதீப் இதன் ஆசிரியர். முஸ்லிம் சமுகத்தின் விழிப்புணர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட இப்பத்திரிகை, அரசியல் புரட்சியோடு, கலை இலக்கியப் புரட்சியையும் நிகழ்த்தியது.

கலைவாதி இன்ஸானில் நிறையவே எழுதியிருக்கிறார். உண்மையில் ஒரு உதவி ஆசிரியரின் பங்களிப்பை நிகர்த்ததாக கலைவாதியின் எழுத்து இருந்தது. ஆனால், கலைவாதி என்ற பெயரில் ஒரு வரிதானும் எழுதவில்லை. ''புரட்சிக் கவிஞன் கே'' என்ற பெயரில் கவிதைகளும், ''மன்னிநகர்க் கலீல்'' என்ற பெயரில் சிறுகதைகளும், ''சர்தார்'' என்ற பெயரில் பேனாச் சித்திரங்களும் எழுதிக் குவித்தார். புரட்சி தாசன், மன்னார் மைந்தன், மன்னாரான் என்ற பெயர்களிலும் எழுதினார். ஒரு வகையில் சொல்லப் போனால் கலைவாதிக்குப் பெயர் தேடித்தந்த பத்திரிகை ''இன்ஸான்''. ''இன்ஸான் பண்ணையில் வளர்ந்தேன்'' என்று கூறிக் கொள்வதில் கலைவாதி பெருமையடைகின்றார். (இன்ஸானில் வெளியான இவரது சில சிறுகதைகள் ஒரு வெள்ளி ரூபாய் என்ற சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன.)

தற்போது 'ஐ' அலைவரிசையில் 'பிறைக் கதம்பம்' என்ற

மாதாந்த நிகழ்ச்சியை வழங்கி வரும் இவர் தனது பிறந்தகமான மன்னாரைப் பற்றிய ஆய்வு நூலொன்றை எழுதிக் கொண்டிருக்கிறார்.

இத்தகைய இவரின் சேவைகளுக்காக இவர் பெற்றுள்ள விருதுகள் வருமாறு:

1. கலைவாதி	-	மன்னார் மக்கள் வழங்கியது.
2. தீந் தமிழ்ச் செல்வர்	-	அட்டாளைச்சேனை நூல் நிலையம் 1985ல் வழங்கியது.
3. பல்கலைக் குரிசில்	-	அடம்பன் கலைவிழாவில் (மன்னார்) வழங்கப்பட்டது.
4. தாஜுல் உலூம் (பல்கலை வேந்தர்)	-	முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு 1991ல் வழங்கியது.
5. கலாபூஷணம்	-	கலை கலாசார அமைச்சு 1999ல வழங்கியது.

மன்னார் முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மன்னார் வாசகர் வட்டம் ஆகியவற்றில் தலைவராகவும், அகில இலங்கை சித்திர ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி ஆகியவற்றின் செயலாளராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை கலைக்கழக தேசிய நாடகக்குழு ஆகியவற்றின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வரும் கலைவாதியின் மனைவி பெயர் உம்மு பஸீரா. இத்தம்பதியினருக்கு ஹாரித், ஷபகத் ரம்ஸான், பாத்துமா நஸ்வா (இவர் எழுத்துத்துறையில் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தகக்கது), ஆய்ஷா நுஸைஹா ஆகிய நான்கு அன்புச் செல்வங்கள் உளர்.

இவரின் முகவரி:
Kalaiwathi Kaleel
148, Polkotuwa Rd.
Pinwela
Panadura.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 152

முஹம்மது பாறூக்

எழுத்துத்துறை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கல்முனை தேர்தல் தொகுதியில், மருதமுனை - 04 கிராம சேவகர் பிரிவில் வசித்து வரும் அப்துல் மஜீது முஹம்மது பாறூக் அவர்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை என இலக்கியத்துறையில் பங்களிப்பு வழங்கிவரும் ஒரு எழுத்தாளராவார்.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ம் திகதி அப்துல் மஜீது தம்பதியினரின் மகனாகப் பிறந்த பாறூக் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் க.பொ.த. (சா/த) வரை கற்றுத் தேர்ந்தார். தற்போது சுயமாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இவர் சித்தி நூறுந் நயீமாவின் அன்புக் கணவராவார். இத்தம்பதியினருக்கு சதாம் றூமி, சிம்றானா ஆகிய அன்புச் செல்வங்கள் உளர்.

1965ம் ஆண்டில் ''எழில் நிலவே'' எனும் இவரின் கன்னிக் கவிதையை 'இளம்பிறை' சஞ்சிகை 1965 மார்ச் இதழில் பிரசுரித்தது. அதிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளையும், 25 சிறுகதைகளையும், பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் இளம்பிறை, தினபதி, வெற்றிமணி, மித்திரன், தினகரன், நவமணி, மல்லிகை, மாணிக்கம், ஜனவேகம், தினக்கதிர

வீரகேசரி, தினக்குரல், முனைப்பு, இடி, செய்தி, தேன்மதி, ஈழமணி, அக்னி, ஈழ மக்கள் குரல், சமத்துவம் ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின. மருதமுனை முக்கனி இலக்கிய வட்டம், கல்முனை எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் வகிக்கும் பாறூக் அவர்கள் தனது எழுத்துலகப் பயணத்தில் ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்திய வழிகாட்டிகளாக புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன், மரதூர்க்கொத்தன், மருதூர்கனி ஆகியோரை அன்புடன் நினைவு கூர்ந்து வருகின்றார்.

புன்னகை வேந்தன், வஸீகரன் ஆகிய பெயரிலும் எழுதிவரும் இவர் ஆங்கில மொழியில் பிரசுரமான பல தரமான ஆக்கங்களை தமிழ்மொழியில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். உதாரணமாக தினக்கதிரில் 08.07.2000 முதல் 10.03.2002 வரை பிரசுரமான காலனாய் வந்த கனிகள், பெண்மையின் சீற்றம், மேஜர் தந்த பரிசு, சந்தன மரம், தாகூரின் கிணறு, ராணி ஞானம் பெற்றாள், உண்மை வென்றது, மீனா பீடி சுற்றிக் கொண்டிருக்கிறாள், இந்துமா, தோல்வியின் மறு பக்கம், வரட்சியும் வசந்தமும், தண்ணீர்க்குடம் ஆகியன இவரின் மொழி பெயர்ப்புக் கதைகளாகும்.

26.01.1972 இல் தினபதியில் இவர் எழுதிய ''மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுவது இலக்கியம்".., 01.03.1985 இல் தினபதியில் எழுதிய 'முஸ்லிம்களுக்கு போலி மயக்கம் கூடாது', 06.06.1993 இல் வீரகேசரியில் எழுதிய 'நல்லிலக்கியம் எது? நசிவிலக்கியம் எது?', 26.05.2002 இல் தினக்கதிரில் எழுதிய 'கற்புடைமைப் பரிசோதனை அவசியமா ஆகிய கட்டுரைகள் வாசகர்களின் வரவேற்பினைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவரின் முகவரி:

A.M. Parouque
'Symranas'
136, Maraikkar Rd.
Maruthamunai - 32314

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 153

யூ.எல். முஸம்மில்

ஊடகத்துறை

வட மாகாணம், குருநாகல் மாவட்டம், வாரியபொல தேர்தல் தொகுதியில், 'ஹேண கெதர' கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த உதுமாலெவ்வை முஸம்மில் அவர்கள்; யூ.எல். முஸம்மில், ஹேணகெதர முஸம்மில், அபு ஹனா, இப்னு உஸ்மான், அம்முஸல்மான், அம்முபாஸி ஆகிய பெயர்களில் எழுதிவரும் வளர்ந்து வரும் ஒரு எழுத்தாளனும், கவிஞரு மாவார்.

1970ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி உதுமாலெவ்வை தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த முஸம்மில் 'ஹேணகெதர முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்பு அந்-நஜாஹ் அரபுக் கல்லூரியில் இணைந்து கற்றார். மௌலவிப் பட்டமும், அரச தகவல் திணைக்களத்தின் ஊடகத்துறை பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்து 'ஊடகத்துறை டிப்ளோமா' பட்டமும் பெற்றுள்ள இவர்; சுய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அதே நேரத்தில் பகுதிநேரமாக 'தினகரன்' வாரியபொல நிருபராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவரின் முதல் ஆக்கம் 1987ம் ஆண்டில் 'அந்-நஜாஹ்' எனும் சஞ்சிகையில் 'ஓர் உள்ளம் உணர்ந்தது' எனும் தலைப்பில்

இடம்பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இத்தகைய இவரின் ஆக்கங்கள் தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

1997 அக்டோபர் 13ம் திகதி முதல் தினகரன் ஆசிரியர் பீடத்தில் சுமார் ஒரு மாத காலப் பயிற்சியினைப் பெற்ற முஸம்மில் 1997 இலிருந்து தினகரனுக்கு செய்திக்கட்டுரைகளை எழுதி வருகின்றார். இவ்வாறு இவர் எழுதிய செய்திக் கட்டுரைகளுள் முதல் கட்டுரையை 'சாதனை படைத்த பிலியட்வீரர் லாபிரை நாடு என்றுமே மறக்காது' எனும் தலைப்பில் 1997.10.28ம் திகதி தினகரன் பிரசுரித்தது. 2001ம் ஆண்டு டிசம்பர் 03ம் திகதி முதல் 'தினகரன்' வாரியபொல நிருபராக நியமனம் பெற்று தற்போது முனைப்புடன் செய்திகளை எழுதி வருகின்றார்.

''செய்திகள், செய்திக் கட்டுரைகள் எழுதும் போது நடுநிலைமைப் போக்குடன் எழுத வேண்டும் என ஆசைப்பட்டாலும் சில சந்தர்ப்பங்களில் பக்கசார்பான செய்திகளை எழுத வேண்டியிருப்பது துரதிர்ஷ்டமே'' என ஆதங்கப்படும் இவர் தனது எழுத்துலக ஈடுபாட்டுக்குக் காரண கர்த்தாக்களாக இருந்த சகோதர்களான என்.எம். அமீன், மானாமக்கீன், அஹ்மத் முனவ்வர் ஆகியோரை அன்புடன் நினைவுகூர்ந்து வருகின்றார். அத்துடன் முஸ்லிம் மீடியா போரம், கொழும்பு தமிழ்ச்சங்கம் ஆகியவற்றிலும் அங்கத்துவம் பெற்றுள்ளார்.இவரின் அன்புப் பாரியார் பெயர் பாத்திமா நுஸ்ரத். இத்தம்பதியினரின் ஆசைச் செல்வத்தின் பெயர் - பாத்திமா ஹனா.

இவரின் முகவரி :

U.L. Muzammil
No - 19, Chilaw Rd,
Wariyapola
T/P 037 - 2267218

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 154

பாயிஸா கைஸ்

எழுத்துத்துறை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பேருவளை தேர்தல் தொகுதியில், பேருவளை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த திருமதி பாயிஸா அவர்கள்; ஒரு சிறுகதை எழுத்தாளரும், கவிஞருமாவார்.

1967ம் ஆண்டு டிசம்பர் மாதம் 03ம் திகதி பிறந்த பாத்திமா பாயிஸா அவர்கள் சீனன் கோட்டை முஸ்லிம் பாளிகா மகாவித்தியாலயத்தின் பழைய மாணவியாவார்.

பாயிஸா கடந்த இரண்டு தசாப்தகாலங்களாக எழுதி வருகின்றார். இவரின் கன்னி ஆக்கம் 1986ம் ஆண்டு 'கவிமஞ்சரி' யில் ''ஆனந்தக் கண்ணீர்'' எனும் தலைப்பில் இடம்பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், சிந்தாமணி, நவமணி, ஜனனி, புன்னகை, கவிமஞ்சரி, பாசமலர், பூ, இனிமை, தடாகம், அல்-ஹஸனாத், ஜீவநதி, மிம்ரஹா, ஈரான் செய்தி விவரணம் ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மாதர் மஜ்லிஸ், வாலிப வட்டம் போன்வற்றிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

சமூகச் சீர்கேடுகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை சுட்டிக்காட்டி; தனது எழுத்தினூடாக சமூக எழுச்சிமிகு ஆக்கங்களைப் படைத்து வரும் 'பாயிஸா'வின் முதல் கவிதைத் தொகுதி 'வெளிச்சம்' எனும் பெயரில் 2003இல் வெளிவந்துள்ளது. இவரின் சிறுகதைத் தொகுதியொன்றும் விரைவில் வெளிவரவுள்ளதாக அறிய முடிகின்றது.

கலைச்சிட்டு பாயிஸா ஜுனைட், பாயிஸா கைஸ், புர்ஹா பாயிஸா கைஸ் ஆகிய பெயர்களில் எழுதிவரும் பாத்திமா பாயிஸா; எம்.எச்.எம். கைஸ் அவர்களின் அன்புப் பாரியாராவார். கைஸ் - பாயிஸா தம்பதியினருக்கு பாதிமா புர்ஹா, முஹம்மது அஷ்பாக், முஹம்மது அஷ்பான் ஆகிய மூன்று அன்புச் செல்வங்களுளர்.

இவரின் முகவரி:

Mrs. F. Faisa Kais
21, Shazuliya Road,
China Fort
Beruwala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 155

எஸ். மொஹிதீன் அடுமை
(தலவின்ன பூதொர)

எழுத்துத்துறை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்தும்பறை தேர்தல் தொகுதியில், உடத்தலவின்னை - கலதெனிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த செய்த் அலவி மொஹிதீன் அடுமை அவர்கள் 'தலவின்னை பூதொர' எனும் பெயரில் பிரபல்யம் பெற்றுள்ள கவிஞரும், எழுத்தாளருமாவார்.

1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ம் திகதி உடத்தலவின்னை மடிகே - கலதெனிய வில் செய்த் அலவி தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த மொஹிதீன் அடுமை உடத்தலவின்னை க/ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரி யின் பழைய மாணவராவார். கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் 'IWE' ஆங்கிலப் பாடநெறியில் சித்தியடைந்துள்ள இவர், சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளராக தெல்தெனிய, மெதும்பரை பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகின்றார்.

எழுத்துத்துறையில் இவரின் கன்னியாக்கம் 'மரண அறிவித்தல்' எனும் தலைப்பில் 1979இல் தினகரன் வாரமஞ்சரியில் இடம்பெற்றது. அதேயாண்டில் 'கரை கண்ட ஓடங்கள்' எனும் நாடகமும் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டது. இதிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், இசையும், கதையும் போன்றவற்றை இவர்

எழுதியுள்ளார். தலவின்னை பூதொர, எஸ்.எம். அடுமை, மொஹிதீன் அடுமை, பாத்திமா பூதொர, பூதொர ஆகிய பெயர்களில் இவரால் எழுதப்பட்டு வரும் ஆக்கங்கள் தினகரன், சிந்தாமணி, தினபதி, மித்திரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளிலும், பல சஞ்சிகைகளிலும் இடம் பெற்றுள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சி, தேசிய சேவை ஆகியவற்றில் ஒலிபரப்பாகியுமுள்ளன.

''எனது ஆக்கங்கள் சமூகத்தை ஊக்கப்படுத்த வேண்டும்'' என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதிவரும் 'பூதொர'வின் ஆறுகவிதைகள் 1990 இல் சிந்தனை வட்டத்தினால் வெளியிடப்பட்ட 'அரும்பு'கள் புத்தகத்திலும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும். தனது எழுத்துலக ஈடுபாட்டுக்குக் காரணகர்த்தாக்களா கவும், ஆலோசனைகளையும், ஒத்தாசைகளையும் வழங்கிவருபவர் களாகவும், தன்னை நெறிப்படுத்தி வருபவர்கள் என்ற அடிப்படையிலும் திருவாளர்களான கலாபூஷணம் புன்னியாமீன் (சிந்தனை வட்டம்), எஸ். அருளானந்தன் (தினகரன்), எஸ். ஆனந்தி (தினகரன்), முதுனேகட மஹ்ரூப், மற்றும் ஜனாபா எஸ்.எப். ஸாரா (ஆசிரியை) ஆகியோரை அன்புடன் நினைவு கூர்ந்துவரும் இவர் பாத்திமா பீபீயின் அன்புக் கணவராவார். மொஹிதீன் அடுமை - பாத்திமா பீபீ தம்பதியினருக்கு முஹம்மத் ஷிப்லி, முஹம்மத் ஷாபிஈ ஆகிய இரண்டு செல்வங்கள் உளர்.

இவரின் முகவரி:

S. Mohideen Adumi
28/2, Galadeniya
Udatalawinna Madige,
Udatalawinna
20802

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 156

எம்.பீ. ஹுஸைன் பாரூக்

கலைத்துறை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதியில் அலுத்மாவத்தை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த எம்.பீ.ஹுஸைன் பாரூக் அவர்கள் இலங்கையில் புகழ்பெற்ற வானொலி, தொலைக் காட்சிக் கலைஞரும், மூத்த பத்திரிகையாளரு மாவார்.

1945ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி முஹம்மட் புஹாரி தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த ஹுஸைன் பாரூக் அவர்கள் கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் (ஆரம்பத்தில் இது ஆங்கிலப் பாடசாலை) பழைய மாணவராவார். ஊடகத்துறையில் டிப்ளோமா பட்டதாரியான இவர் தனது சிறுவயது முதலே பத்திரிகைத்துறையிலும், கலைத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது விசேட அம்சமாகும். ஒரு பத்திரிகையாளராக, ஒலிபரப்பாளராக, ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, செய்திப் பிரிவின் பொறுப்பா ளராக இலங்கையின் முதல் தொலைக் காட்சி சேவையான ITN இன் ஆரம்பகால தமிழ், முஸ்லிம் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, தமிழ் முஸ்லிம் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக என ஒவ்வொரு துறையிலும் தனது பங்களிப்பினை மிகவும் திறம்பட நல்கி வந்த

ஹுஸைன் பாரூக் அவர்கள் தற்போது 'டெலி ஸ்டார்' (Tele Star) விளம்பர நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

தனது சிறுவயதிலிருந்தே இவர் எழுத ஆரம்பித்தார். தான் கற்கும் காலத்தில் 'கொழும்பு பெரிய பள்ளிவாசல்' எனும் தலைப்பில் இவர் எழுதிய குட்டிக் கட்டுரை 1958ம் ஆண்டில் 'தினகரன்' பத்திரிகையில் பிரசுரமானது. இக்கன்னி ஆக்கத்தினைத் தொடர்ந்து தினகரன், தினபதி போன்ற தேசிய பத்திரிகைகளிலும், இலங்கை வானொலியிலும் சிறுவர் ஆக்கங்களை எழுதியுள்ளார். அத்துடன் மாணவ பராயத்திலே சில வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள் ளார். இவரின் வானொலிப் பங்களிப்பு 1959 இலிருந்து இடம்பெற்றது.

''விளையும் பயிரை முளையிலே தெரியும்'' என்பார்கள். அதுபோல மாணவர் பராயத்திலே கலையுணர்வும், எழுத்துணர்வும் இவருக்கு கூடப்பிறந்த சொத்தாக வளர்ந்தன. அவை முறையாக நெறிப்படுத்தப்பட்டமையினாலேயே பிற்காலத்தில் பல விடயங்களை சாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டதெனலாம்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு ஒரு பாடகனாக அறிமுகமான இவர் தொடர்ந்து ஒலிச்சித்திரம், குட்டிக்கதைகள், சிறுகதைகள், தொடர்கதைகள் என எழுதிப் புகழ்பெற்றார். 1970ம் ஆண்டில் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக சேவையில் இணைந்த இவர் 1979ம் ஆண்டிலிருந்து தமிழ், முஸ்லிம் செய்திப் பிரிவின் பொறுப்பாளராகவும், பின்பு ஒலிபரப்பு இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார். இக்கால கட்டங்களில் முஸ்லிம் சேவையில் பல புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தி வரவேற்பினைப் பெற்றார்.

எழுபதுகளின் இறுதிப் பகுதியில் இலங்கையில் தொலைக் காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக 1978ம் ஆண்டில் இலங்கை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஆன ITN தனது ஒளிபரப்பினைத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் பணியாற்றிக் கொண்டிருக்கையிலே ITN தொலைக்காட்சியில் தமிழ், முஸ்லிம் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக நியமனம் பெற்று பல தமிழ், முஸ்லிம் நிகழ்ச்சிகளைத் தயாரித்துள் ளார். இவரால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளுள் 'முத்துச்சரம்' 'இரசிகர் அரங்கம்' ஆகிய நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி நேயர்கள் மத்தியில் அமோக வரவேற்பினைப் பெற்றன. முத்துச்சரம், இரசிகர் அரங்கம் பல ஆண்டுகளாக பிரதி ஞாயிறு தினங்களிலும் முறையே பி.ப. 1 மணி முதல் 1.30 மணி வரையும், இரவு 10.00 மணி முதல், 10.15 மணி வரையும் ஒளிபரப்பப்பட்டு வந்தன. 'முத்துச்சரம்' ஒரு சஞ்சிகை நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியில் பேட்டிகள், இலக்கியச் செய்திகள், கலை உலகச் செய்திகள், விமர்சனங்கள், சினிமாப் பாடல்கள், நகைச்சுவைக் காட்சிகள், உள்நாட்டு மேடை, திரைப்பட நடிகர்களின் நாடகங்கள் என்பன இடம்பெற்றன. இதேபோல 'இரசிகர்' அரங்கும் ஒரு சஞ்சிகை நிகழ்ச்சியாகும்.

வானொலியில் தான் தயாரித்தளித்த பிரபல்யம் பெற்ற நிகழ்ச் சிகளை இவர் ITN இலும் காட்சியுடன் சேர்த்தார். இந்த அடிப்படை யில் 'அபூநானா' தொடர் சுமார் 100 அங்கங்கள் ITN இல் ஒளிபரப் பாகின. 'சீமை சமத் நானா' 12 அங்கங்களும், அகராதி அபூநானா 10 அங்கங்களும் ஒலிபரப்பாகின. இவரால் தயாரித்தளிக்கப்பட்ட 'திரைமுத்து', 'கன்ஸுல் இஸ்லாம்' போன்ற நிகழ்ச்சிகளும் இரசிகர் கள் வரவேற்பினைப் பெற்றிருந்தன.

ஹுஸைன் பாரூக் அவர்களினால் ITN க்காகத் தயாரிக்கப் பட்ட சில தமிழ் நாடகங்களை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிட லாம்.

1. நீந்தத் தெரியாத மீன்கள் - (14 அங்கங்கள்)
2. மின்னாத நட்சத்திரங்கள் - (05 அங்கங்கள்)
3. மேகங்கள் நனைவதில்லை - (7 அங்கங்கள்)
4. ஆசை, ஆசை, ஆசை - 1 அங்கம் (தீபாவளி சிறப்பு நாடகம்)

5. சந்தேகக் கனவுகள் - (4 அங்கங்கள்)
6. நீ சிரித்தால் தீபாவளி - (6 அங்கங்கள்)
7. எண்ண எண்ண இனிக்குது - (7 அங்கங்கள்)
8. அந்த முகமா? இந்த முகமா? - (7 அங்கங்கள்)

மேற்குறிப்பிட்ட நாடகங்களுக்கு ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்' கதை, வசனம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரால் தயாரிக்கப்பட்ட 'டுபாய் தர்பார்' நாடகமும் பிரபல்ய மடைந்தது. அத்துடன் நாகூர் ஈ.எம். ஹனீபா 1985இல் இலங்கைக்குச் சமுகமளித்த போது அவரின் இஸ்லாமிய கீதங்களை ஒளிப்பதிவு செய்திருந்தார். அப்பாடல்கள் தற்போதும் ஒளிபரப்பாகின்றன.

தொலைக்காட்சி வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் கவிஞர்கள் பங்கு கொண்ட கவியரங்கு நிகழ்ச்சியை ஒளிபரப்பிய பெருமையும் இவரையே சாரும். அதேபோல தொலைக்காட்சி வரலாற்றில் 'இப்தார்' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தியவரும் இவரே. இஸ்லாமிய முக்கியத்துவ நாட்களை மையப்படுத்தி பல நிகழ்ச்சிகளை இவர் தயாரித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சி மூலம் பல கலைஞர்களுக்குக் களமமைத்துக் கொடுத்த இவர் 2000 ஆண்டில் ITN இல் இருந்து விலகிக் கொண்டார். பின்பு 'டைனாவிஷன்' தொலைக்காட்சியில் 'ஷஹர்' நிகழ்ச்சிகளையும், சக்தி தொலைக்காட்சியில் 'இப்தார்' நிகழ்சிகளையும் தயாரித்தளித்துள்ளார்.

தனது வானொலி, தொலைக்காட்சி துறை ஈடுபாட்டின் போது பூரண ஒத்துழைப்பினையும், ஆலோசனைகளையும், வழிகாட்டல்க ளையும் வழங்கிய கலாசூரி தேவிஸ் குருகே அவர்களை அன்புடன் நினைவு கூர்ந்து வரும் இவர் 1982ம் ஆண்டில் அப்போதைய முஸ்லிம் சமயக் கலாசார அமைச்சராக இருந்த அல்ஹாஜ் எம்.எச். மொஹம்மட் அவர்களின் தலைமையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்ட தூதுக்குழுவில் வானொலி, தொலைக்காட்சி செய்தியாளராக பங்கு கொண்டு சவூதிஅரேபியா, கட்டார், அபுதாபி, டுபாய், ஷாஜா, குவைட் ஆகிய நாடுகளின் கலாசார முக்கியத்துவங்களைத் திரட்டித் தந்தார்.

ஹுஸைன் பாரூக்கின் கலையுலக வாழ்க்கையின் ஆரம்பம் பத்திரிகை தான். 'தினகரன்' நாளிதழில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தவர் அனைத்துலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாடு 'திருச்சியில்' நடைபெற்ற போது இப்பத்திரிகையின் நிருபராகச் சென்று பணியாற்றுமளவுக்கு உயர்ந்தார். 'தினபதி' சிந்தாமணி' பத்திரிகைகளுக்கும் நிருபராக இருந்த இவர் தனது பத்திரிகையுலகத்துக்குரிய குருவாக திரு. எஸ்.டி. சிவநாயகம் அவர்களை அன்புடன் நினைவுகூர்கின்றார். தினபதி பத்திரிகையில் முஸ்லிம் சமய முக்கியத்துவ தினங்களில் பல அநுபந்தங்களை வெளியிடக் காரணமாக இருந்துள்ளார்.

மும்மொழியிலும் சிறந்த தேர்ச்சி மிக்க இவர் 'டய்ம்ஸ் ஒப் ஸிலோன்' பத்திரிகையின் செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் புதன்கிழமை தோறும் 'மக்ஸனுல் இஸ்லாம்' (Makzanul Islam) எனும் பகுதியினைத் தயாரித்து வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஊடகத்துறையில் முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக செயற்குழு அங்கத்தவராகவும், முஸ்லிம் மீடியா எலைன்ஸில் கௌரவ பொதுச் செயலாளராகவும் பணியாற்றியுள்ள இவர் பல்வேறுபட்ட சமூக சேவை அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்றுப் பொதுசேவைகளும் புரிந்து வருகின்றார்.

ஹுஸைன் பாரூக் அவர்களின் இத்தகைய சேவைகளை கௌரவித்து 1992ம் ஆண்டில் முஸ்லிம் சமய கலாசார விவகார அமைச்சினால் ஆண்டு தோறும் நடத்தப்பட்டுவந்த 'வாழ்வோரை வாழ்த்துவோம்' நிகழ்ச்சியில் கௌரவ அமைச்சர் ஏ.எம்.எம். அஸ்வர்

அவர்களின் மூலம் 'லியாவுல் பண்ணான்' (Liyaul Fannan) கலைச்சுடர் எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதை தன்வாழ்நாளில் பெற்ற உயர் கௌரவமாகக் கருதுகின்றார்.

ஹுஸைன் பாரூக் அவர்களின் அன்புப் பாரியார் நுஸ்ஹா. இத்தம்பதியினருக்கு பாத்திமா பெரோஸா, உணைசுல் அமீர் ஆகிய இரண்டு அன்புச் செல்வங்களுளர்.

இவரின் முகவரி :

M.B. Hussain Farook,
75, Joseph Dias Lane,
Bloemendahal Rd,
Colombo - 15
T/P 0112546047

ஹுஸைன் பாரூக்கினால் இதுவரை ஒரு நூல் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலின் முகப்பட்டை கீழே தரப்படுகின்றது.

தொகுப்பு: ஹுஸைன் பாரூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு 157

ஏ.எச்.எம். அத்தாஸ்

எழுத்துத்துறை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மத்துகம தேர்தல் தொகுதியில் வெலிப்பன்னை கிழக்கு - வட பிரிவு 793A கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த அப்துல் ஹமீது முஹம்மது அத்தாஸ் அவர்கள் 'வெலிப்பன்னை அத்தாஸ்', 'ஏ.எச்.எம். அத்தாஸ்', 'இளங்கலைஞன்', 'வெலிப்பன்னை அமுதன்' ஆகிய பெயர்களில் எழுதிவரும் சிரேஷ்ட எழுத்தாளர்களில் ஒருவராவார்.

1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி அப்துல் ஹமீது தம்பதியினரின் புதல்வராகப் பிறந்த அத்தாஸ் அவர்கள் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயம், தர்காநகர் அல்-ஹம்ரா மகாவித்தியாலயம், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். 1963ம் ஆண்டில் 'எச்.எஸ்.ஸி' வரை கற்றுத்தேறிய இவர் 1964இல் மாணவ ஆசிரியராக வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியர் பணியில் இணைந்தார். 1966/67ல் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை முடித்துக் கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியராக 1968 - 1969 கால கட்டத்தில் பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையில் சேவையாற்றினார். பின்பு 1970/71 இல் நேபிலிகும்புர சிங்கள பாடசாலையிலும், 1972இல் மக்கொன பௌத்த கனிஷ்ட

வித்தியாலயத்திலும், 1973/77 இல் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்திலும், 1977/78 இல் தி/பேராற்றுவெளி மகா வித்தியாலயத்திலும், 1978/79 இல் க/ரம்புக்கந்தன அல்-ஹுதா முஸ்லிம் வித்தியாலயத்திலும், 1979/80 இல் கு/இப்பாகமுவை மகா வித்தியாலயத்திலும், 1980/83 இல் பேருவளை மாளிகாஹேன மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணியாற்றிய அத்தாஸ் 1983இல் அதிபராக பதவி உயர்வு பெற்று 1983/93 காலப்பகுதியில் மத்துகம சென்மேரிஸ் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினார். பின்பு வெலிப்பன்னை ரஹ்மானியா மகாவித்தியாலயத்தில் முதலாம் தர அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். இவர் மேல்மாகாண சிறந்த அதிபர் தெரிவில் ''வித்தியா நிகேதாலங்கார'' பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவரின் இலக்கிய பணியை அவதானிக்கும் போது; ''முஸ்லிம்களுக்கு மதக்கல்வி புகட்டுதலில் மாற்றம் வேண்டும்'' எனும் தலைப்பில் இவரால் எழுதப்பட்ட முதல் கட்டுரையை 1961.08.25ம் திகதி 'தாரகை' வாராந்தப் பத்திரிகை பிரசுரித்தது. அன்றிலிருந்து இன்றுவரை முன்னூற்றுக்கும் அதிகமான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், சிறுவர் பாடல்கள், விமர்சனங்கள் ஆகிய வற்றை எழுதியுள்ளார். இவரின் இத்தகைய ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, தாரகை, கலைமலர், அஷ்ஷம்ஸ், மித்திரன், விவேகி, முஸ்லிம்குரல், நவமணி, கலை அமுதம், கலைச் சுடர் ஆகிய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பிரசுரித்துள்ளன.

அத்தாஸ் அவர்கள் இதுவரை மூன்று புத்தகங்களை எழுதியுள்ளார்

1. சிந்தனைப் பார்வைகள்;
   2003ம் ஆண்டில் 'மொடர்ன் ஸ்டடி சென்றர்' மூலம் வெளியிடப் பட்ட இந்நூலில் கல்வி, சமூகம், வரலாறு, சமயம், விவரணம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய 15 கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எம்.எம்.எம். யூசுப் நினைவுகள் (தொகுப்பு நூல்);
இந்நூல் 1985 இல் வெளிவந்தது. இது வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலய பழைய மாணவர் சங்க வெளியீடாகும்.

3. உணர்வூட்டும் இஸ்லாமிய கீதங்கள்;
இளங்கலைஞன் எனும் புனைப் பெயரில் எழுதிய இந்நூல் 1968 இல் பைதுல் முபாரக் நூல் நிலைய வெளியீடாக வெளிவந்தது.

பகுதி நேரமாக பத்திரிகைச் செய்தியாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். தினகரன் மத்துகம பிரதேச நிருபராகக் கடமையாற்றிய இவரின் முதல் செய்தி 'காட்டுப் பன்றிகளின் தொல்லை' எனும் தலைப்பில் 1994இல் இடம்பெற்றது. (1994 முதல் 2001 வரை தினகரன் செய்தியாளராகப் பணியாற்றியுள்ளார்.) இவர் நிருபராகக் கடமையாற்றிய காலகட்டங்களில் நிகழ்ச்சித் தொகுப்புகள், பிரதேச அடிப்படைத் தேவைகள், பிரதேச சமூக, பொருளாதார, அரசியல் நிலவரங்கள் பற்றிய பல்வேறுபட்ட செய்திகளையும், விமர்சனங்களையும் எழுதியுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



''தனது தாய், தந்தையர் உடன் பாட்டனார் அப்துர்-ரஹ்மான் அவர்களால் சிறுவயது முதல் வாசிப்பு ஆர்வத்தை ஏற்படுத்தப்பட்டமையும், மர்ஹூம் அதிபர் எம்.எம்.எம். யூசுப் இலக்கியத்துறையில் ஈடுபடவைத்தமையும், 'தினகரன்' பத்திரிகை களமமைத்துக் கரம் தந்தமையுமே'' தனது இலக்கியத்துறை ஈடுபாட்டுக்கும், வளர்ச்சிக்கும் காரணமெனக் கூறும் அத்தாஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம்

மீடியா போரத்தில் அங்கத்துவம் வகித்து வருகின்றார்.

வெலிப்பன்னை ரஹ்மானியா வித்தியாலயத்தில் கடமையாற்றும் யூ.எல். ஸித்தி நபீஸா இவரின் அன்புப் பாரியாராவார். அத்தாஸ் - நபீஸா தம்பதியினருக்கு முஹம்மது யஸீர் அரபாத், பாத்திமா ஸபருன் ஆகிய இரண்டு அன்புச் செல்வங்களுளர்.

இவரின் முகவரி:

A.H.M. Aththas,
41, Arafath Akham,
Muslim Road
Welipenna
T/P 034-2274199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேட நன்றிகள்....

- இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களை திரட்ட அனுசரணை வழங்கிய நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் **எம்.பீ.எம். அஸ்ஹர்** அவர்களுக்கு,

- இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டினை இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் அறிமுகப்படுத்த அயராது உழைத்த **உடப்பூர் வீரசொக்கன்** அவர்களுக்கு,

- இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டினை சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்தியதுடன், சர்வதேச ரீதியாக ஆவணப்படுத்தலுக்கு பூரண ஒத்துழைப்பு நல்கிவரும் **என்.செல்வராஜா** (ஐக்கிய இராச்சியம்) அவர்களுக்கு,

- இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள புகைப்படங்களை 'ஸ்கேன்' செய்து உதவிய இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் திருமதி **எம்.எம்.என். முனவ்வரா உவைஸ்** அவர்களுக்கு,

நன்றி..... நன்றி..... நன்றி.....

இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் விபரங்கள் 2006 நவம்பர் வரை உள்ளவையாகும். அனைத்து விபரங்களும் நேரடியாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, ஆதாரபூர்வமாக பெறப்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உடத்தலவின்னை மடிகே எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் புன்னியாமீன் அவர்கள் 100 நூல்களுக்கு மேல் இலங்கையில் எழுதி வெளியிட்டுள்ள ஒரே எழுத்தாளராவார். அதே நேரம் இலங்கை இலக்கிய வரலாற்றில் ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் தொகுத்து தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அவற்றை ஆவணப்படுத்தும் உயர்நோக்குடன் செயற்பட்டு வருவது பாராட்டக் கூடிய விடயம். இந்த அடிப்படையிலும் கலாபூஷணம் புன்னியாமீன் அவர்களுடைய பெயர் வரலாற்றில் ஒரு சுவடாகப் பதிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அல்ஹாஜ் மௌளவி ஜே.மீராமொஹிதீன்
பிரதிப் பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

ISBN:955-8913-63-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org